மாலை : 50 மணி : 9 செப்டம்பர் 2008 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

மூலவர் ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன்

உற்சவர் ஸ்ரீ பார்த்தசாரதி

அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில்,

சோளிங்கர், வாலாசா வட்டம்,
வேலூர் மாவட்டம்.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்று சிறப்புற்று விளங்கும் 108 திவ்ய வைணவ திருத்தலங்களுள் ஒன்றானதும், பேயாழ்வார், நம்மாழ்வார், மற்றும் திருமங்கை ஆழ்வார் ஆகிய மூவரால் மங்களாசாசனம் செய்யப்பெற்று, வேலூர் மாவட்டத்தில் தனிச் சிறப்பு வாய்ந்த பிரார்த்தனை தலமாக சோளிங்கபுரம், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில் விளங்கி வருகிறது.

இத்திருத்தலம் சென்னையிலிருந்து 110 கி.மீ. தொலைவிலும், அரக்கோணம் ரெயில் நிலையத்திலிருந்தும், திருத்தணி ரெயில் நிலையத்திலிருந்தும் சுமார் 27 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இத்திருத்தலத்தில் குறிப்பாக பெரியமலையில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் அருள்மிகு அமிர்தபலவல்லித்தாயார் உடனுறை அருள்மிகு யோக நரசிம்மசுவாமி திருக்கோயில் மூலவர் தாயார், பெருமாள் விமானங்களுக்கு தற்போது சுமார் ரூ10.75 கோடி செலவில் தங்க விமான திருப்பணி 14.07.2008 முதல் நடைபெற்று வருகிறது.

அன்பர்கள் தங்க விமான திருப்பணிக்கு தாராளமாக தங்கமாகவோ அல்லது பணமாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைத்து எம்பெருமான் அருள்பெற வேண்டுகிறோம்.

உதவி ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில்,
சோளிங்கர் - 631 102. வேலூர் மாவட்டம்,

ஆ. வீரபத்திரன், பி.ஏ.பி.எல்.,
உதவி ஆணையர் / செயல் அலுவலர்

கோ. பக்கிரிசாமி, பி.எஸ்சி.பி.எல்.,
தக்கார்/இணை ஆணையர் / வேலூர்



குறளோவியம்

செல்வந்தர் வீட்டுப் பணியாள் அவன்! பெயர் சேவல்! அந்த வீட்டில் பெரியவர் முதல் குழந்தைகள் வரையில் எல்லோருக்கும் அவன் அடிமை! வயிறு வளர்க்க வேண்டுமே; வேறெப்படி வாழமுடியும்- வறுமைச் சூழலில் சிக்கிக் கொண்டவனால்! செல்வந்தரின் பாட்டிக்குத் தொண்ணூறு வயது. அந்த அம்மையார் "அடே! சேவல்!" என்று அதிகார குரலில் அழைப்பார். பேரனுக்கு எட்டு வயது. அவனும் "அடே! சேவல்!" என்றுதான் அழைப்பான். அடிமை வேலை செய்யுமிடத்தில் மரியாதையென்ன வேண்டிக்கிடக்கிறது. அதனால் ஐம்பது வயதான சேவல், அந்த அழைப்புக்களைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்வதேயில்லை.

பேரப்பிள்ளைகளைப் பெட்டிவண்டியில் வைத்து, சேவல்தான் பள்ளிக்கு இழுத்துக் கொண்டு போவான். தேர், திருவிழாக்கள் பல கல் தொலைவில் உள்ள ஊர்களில் நடைபெற்றாலும் பெட்டி வண்டி இழுக்கும் வேலை அவனுடையதுதான்; நாள்தோறும் கழனிகளைப் பார்வையிடச் செல்வந்தர் செல்லும்போதும் சேவலின் தோள்களே சிவக்கும், வண்டியிழுத்து!

குண்டு குழிகளில் வண்டியேறிச் சற்று ஆடிவிட்டாலோ- அல்லது வண்டியிலிருப்போரின் விருப்பத்திற்கேற்ப வேகமாகப் போகாவிட்டாலோ, சேவலுக்குச் சவுக்கடிகள் விழுவதும் வாடிக்கை!

அந்த வடுக்கள் எல்லாம் அவனது தோளிலும் முதுகிலும் விலாப்புறத்திலும் செந்நிறம் காட்டிக் கொண்டிருக்கும். அடிக்கும்போது வலி பொறுக்க முடியாது தான்! வாங்கிக் கொண்டால்தான் வயிறு நிரம்பும்! தாங்கிக் கொண்டால்தான் வாழ்வை நகர்த்த முடியும்!

"அடக் கடவுளே! உனக்குக் கண்ணில்லையா? வாயில்லாத இந்த ஊமையை இப்படி அடிக்கிறார்களே!" என்று சேவல் தன் மனத்துக்குள் சொல்லிக்கொண்டு யாருக்கும் தெரியாமல் கண்ணீர் விட்டு அழுவான்!

செல்வந்தர் வீட்டில் திடீரென ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது.

பெட்டி வண்டியிழுக்க இரண்டு காளைமாடுகள் வாங்கப்பட்டன.

சேவலுக்கு ஒரே கவலை! தனக்கிருந்த வேலை போய்விடுமோ என்பதுதான் அவன் கவலைக்குக்காரணம்.

அப்படியொன்றும் நிகழவில்லை! காளைமாடுகளை வண்டியில் பூட்டி ஓட்டுகிற வண்டிக்காரன் பதவி அவனுக்கு வழங்கப்பட்டது. சேவலுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

பெட்டி வண்டியில் மாடுகளைக் கட்டி, முன்னே அமர்ந்து அவற்றை ஓட்டிச் செல்லுவதை அவன் தனக்குக் கிடைத்த பதவி உயர்வாகக் கருதிப்பெருமை கொண்டான்!

அவன் கால்களால் மாடுகளை உதைத்து ஓட்டுவான்! கைகளால் தட்டி ஓட்டுவான்! மேலும் வேகமாகப் போக வேண்டுமென்றால், காளைகளின் வாலை முறுக்குவான்! ஓடி ஓடிக் காளைகள் அயர்ந்துபோய், சற்று வேகத்தைக் குறைத்திடுமானால், சேவலுக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும்! கையில் உள்ள சவுக்காள் ஆத்திரம் தீர அடிப்பான். தார்க்குச்சியால் காளைகளின் முதுகெல்லாம் குத்துவான்! அவற்றின் முதுகில் குருதி கொப்பளிக்கும். அதைச் சுவைக்க ஈக்கள் மொய்க்கும்.

அவன் அடிமையாக இருந்து அடிபட்டான். இப்போது அவனுக்கு இரண்டு அடிமைகள்

கிடைத்துவிட்டன.

ஒருநாள் இரவு அவன் தூங்கிடும்போது கனவில் அந்தக் காளைகள் வந்தன. இரண்டும் அவனிடம் பேசுவதுபோல் தெரிந்தது. சேவல், காளைகள் பேச்சைஉற்றுக்கேட்டான், கனவில்தான்!

"அய்யா வண்டிக்காரரே! உமது உடலெல்லாம் இருக்கிற வடுக்கள், நீர் வண்டியிழுத்தபோது வாங்கிய அடிகளின் அடையாளம்தானே! அப்போது உமக்கு எப்படி வலித்திருக்கும்? நீர் எங்களை இப்போது அடித்துக் குத்தி வால்களை முறுக்கிடும்போது எங்களுக்கும் அப்படித்தானே வலிக்கும்?"

காளைகளின் இந்தக் கேள்வி காதில் விழுந்ததுதான் தாமதம், சேவல் கனவு கலைந்து விழித்துக் கொண்டான். இனிமேல் அந்தக் காளைகளை அடிப்பதில்லையென்று உறுதி செய்துகொண்டு தொழுவத்திற்குச் சென்றான். அவற்றின் மீது மொய்த்துக் கொண்டிருந்த ஈக்களை விரட்டிவிட்டு அன்புடன் அந்தக் காளைகளைத் தட்டிக் கொடுத்தான்.



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

"தன்னுயிர்க்குத் துன்பம் தரக்கூடியவை, எவையென்று உணர்ந்த ஒருவன், மற்ற உயிர்களுக்கு அந்தத் துன்பங்களைச் செய்வது என்ன காரணத்தாலோ?"

-என்றுதான் வள்ளுவர் வேதனையோடு கேட்கிறார்.

"தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ

மன்னுயிர்க்கு இன்னா செயல்."

அதிகாரம் - 32 இன்னாசெய்யாமை பாடல் - 318

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது

இதழின் உள்ளே ...

1	கண் கொடுக்கும் வனிதை - குன்று மாமுலையம்மை பூசை.ச.ஆட்சிலிங்கம்	5
2	திறை கொள்ளும் இறை - தமிழாகரர் தெ.முருகசாமி	8
3	குலசேகராழ்வாரும் திருவரங்கனும் - புலவர். ஏ.பரந்தாமன்	11
4	வேதாரண்யம் - க.சுகுமாரன்	13
5	புராதன சின்னங்களான கோயில்களில் செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை - திரு.தியாக.சத்யமூர்த்தி	18
6	வெடால் வடவாமுகாக்கினீஸ்வரர் ஆலயம் - பனையபுரம். அதியமான்	22
7	ஜெர்மனியில் தேரோட்டம் - இளசைசுந்தரம் எம்.ஏ.பி.எட்., ஐ.பி.எஸ்	25
8	சமயம் வளர்த்த பேரரசிகள் - அழ.முத்துப்பழனியப்பன்	28
9	உலகம் உய்ய உதித்த உடையவர் - பெ.இராமநாதபிள்ளை	31
10	கீழப்பழையாறை - அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயில்	34
11	திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்	37

அருள்மிகு கிரிகுஜாம்பிகை (உற்சவர்)

திருநாகேஸ்வரம்.

கண் கொடுக்கும் வனிதை குன்றுமாமுலையம்மை

தஞ்சைமாவட்டத்தில் 150 ஆண்டுகளுக்கு முன்பு வெட்டவெளி சுவாமிகள் என்பவர் வாழ்ந்து வந்தார். இவருக்கு விதிவசத்தால் இருகண்பார்வையும் பறிபோனது. அவர் குன்றுமாமுலை அம்மை மீது தோத்திரம் பாடிப் பரவினார். சிலநாட்களில் கண் சரியாகி விட்டது., 30 விருத்தங்களை உடைய அந்நூலின் ஒரு விருத்தத்தை இங்கே காணலாம்.

"பொன்னவிர் கடுக்கை வேணி எம்பரன்பால்
பொலி பரிபூரணப் பொருளே
முன்னமோர் மறையோன் கதிர்மதியுறுநாள்
முழுமதித் தினமென மொழிய
பின்னமில் அடியவன் உரைதவறாப்
பெற்றிதந் தாண்டருள் புரிந்தாய்
அன்னையே குன்றுமாமுலைத் தாயே
அடிய னேற் கருள்புரிவாயே."

பொன் போன்று ஒளிருகின்ற கொன்றை மாலைகளை அணிந்த எம்பெருமானாகிய சிவபெருமானிடத்திலே பொலிந்து தோன்றுகின்ற முழு முதற் பொருளே முன்னாளில் (அபிராமி பட்டர்) ஓர் மறையவன் அமாவாசைஅன்று உனது அருளை நினைந்திருந்த காரணத்தால் பவுர்ணமி என்று அரசனிடத்திலே கூறி அதுவே உண்மை என சாதித்தான். அவனுடைய வார்த்தையை உண்மையாக்க வேண்டி நீ உனது தோடினை எறிந்து நிலவாக வரும்படி செய்து அவனுக்கு அருள்புரிந்தாய். அத்தகைய அருள் வெள்ளமே, குன்றமாமுலைத்தாயே அடியேனுக்கும் அருள்புரிவாய் (காலந்தாழ்த்துதல் அழகல்ல)

திருநாகேச்சுரம்

குன்றுமாமுலை அம்பிகை (கிரி குஜாம்பிகை)

அண்டசராசரங்களை உண்டாக்க விரும்பிய இறைவனுடைய எண்ணத்தில் மின்னல் வடிவம் போல் தோன்றியவள் பராசக்தியாவாள். அந்த பராசக்தி இறைவனின் படைப்பில் முதன்முதலாகத் தோன்றியதால் ஆதிசக்தி என்று அழைக்கப்படுகிறாள். மின்னல் திரண்ட வெண்மை நிறத்துடன் இருந்ததால் அவளைக் கௌரி என்று அன்பர்கள் கொண்டாடினர். கௌரி என்பதற்கு மின்னலையொத்த வெண்ணிறம் என்பது பொருள்.

அந்த கௌரிதேவியே பெண் உருவத்துடன் முதலில் வெளிப்பட்ட ஆதிதெய்வமாவாள். அவள் சிவபெருமானின் அருள் வடிவமாகவும் சுதந்தர தெய்வமாகவும் விளங்குகிறாள். இவளையே நாம் இந்த நவராத்திரி விழாவில் கண்டு மகிழ்ந்து அருள்பெற உள்ளோம். இவள் குடந்தை நகருக்குத் தென்கிழக்கில் அமைந்துள்ள திருநாகேஸ்வரத்தில் நாகநாத சுவாமி ஆலயத்தில் கோயில் கொண்டுள்ளாள். ஆதியில் நாகர்கள் இவளை வழிபட்டு வந்தனர். அதையொட்டி இந்த இடம் திருநாகேசுவரம் என்றானது. இந்த அம்பிகையைக் குன்றுமாமுலை அம்பிகை என்று அழைக்கின்றனர். பெண் தெய்வங்களுக்கு வீரம், கருணை, அருள் முதலியவற்றைக் குறிக்கும் பல பெயர்கள் இருந்தாலும், அவற்றில் அன்னையின் அருள் சுரப்பதைக் குறிக்கும் பெயர்கள் சிறப்புப் பெறுகின்றன.

உயிர்களுக்குப் பால் சுரந்து ஊட்டும் நிலையே அன்னையின் அருள்நிலையில் உயர்ந்தது என்பதால் அம்பிகையின் திருமுலைகள் சிறப்புடன் போற்றப்படுகின்றன. திருஞான சம்பந்தருக்குத் திருஞானப்பால் ஊட்டிய ஐதிகவிழா திருமுலைப்பால் உற்சவம் என்று அழைக்கப்படுவது காண்க. அவருக்குப் பாலுட்டிய அம்பிகையைப் போற்றும் அடிகளார் கவுணியர்க்குப் பால் சுரந்த கலசம் போற்றி என்று துதிப்பதும் காண்க.

எனவே, இவள் திருமுலையின்



பெயரால் ''குன்றுமா முலையாள்'' என்று அழைக்கப்படுகிறாள். இதையே வடமொழியில் கிரிகுஜாம்பிகை என்பர்.

சிவாலயங்களில் சிவபெருமானுடன் உடனாய தேவியாகக் கொண்டாடப்படும் நிலையில் உள்ள பரிவார தேவியாக இவள் இல்லை. சர்வ சுதந்திரமாக தனியரசு நடத்தும் தெய்வமாக வீரசக்தியாக விளங்குகிறாள். இத்தகு தனித்தன்மை பெற்ற தெய்வங்களைச் சிவாலயத்தின் வடகிழக்குப் பகுதியில் வைத்து வழிபடுவது மரபாக உள்ளது. அதையொட்டி இவள் திருநாகேசுவரத்தில் ஆலயத்தின் வடகிழக்குப் பகுதியில் தனிஆலயத்தில் எழுந்தருளியுள்ளாள். நாகேசுவரர் கோயில் வளர்ந்து பெரியதானபோது இவளுடைய ஆலயத்தையும் இவளுக்குரிய திருக்குளத்தையும் உள்ளே இணைத்துக் கொண்டு வெளிமதிலும் நான்கு திசைகளிலும் கோபுரங்களும் அமைக்கப்பட்டது என்பர்.

(திருநாகநாதசுவாமி ஆலயத்தில் அவருக்குத் தேவியாக விளங்கும் அம்பிகைக்குப் பிறையணி நுதலாள் என்பது பெயர். அவளுடைய சந்நிதி ஆலயத்துள் தனியே அமைந்துள்ளது.)

இவளுடைய ஆலயம் மிகப் பெரியதாக உள்ளது. இதன் தெற்கு வாயிலின் மீது ஏழுநிலை ராஜகோபுரம் அமைந்துள்ளது. கோபுரத்திற்கு முன்புறம் நீண்ட சங்கிலி(எ) இணைப்பு மண்டபம் உள்ளது.

கோபுர வாயிலைக் கடந்து உட்சென்றால் திறந்த வெளிப் பிராகாரத்தை அடையலாம். அதை வலம் வந்து கிழக்குப் பிராகரத்தின் வழியாக உள் வாயிலைக் கடந்து மகாமண்டபத்தை அடையலாம். இங்கிருந்து உட்பிரகாரத்தை வலம் வரலாம். இதில் தென்கிழக்கு முனையில் மேற்கு நோக்கியவாறு சாத்தான் (சாஸ்தா) எழுந்தருளியுள்ளார். பிரகாரத்தில் விநாயகர் முருகன் முதலிய பரிவாரங்கள் எழுந்தருளியுள்ளனர்.

கருவறையில் குன்று மாமுலை அம்மையைத் தரிசிக்கிறோம். அவள் நெடிய வடிவுடன் திகழ்கிறாள்.

இவளுடைய திருமேனி புற்றுமண்ணால் ஆனதாகும். இவள் நாற்கரங்களுடன் திகழ்கிறாள். மேற்கரங்களில் ஜெபமாலை, தாமரை ஆகியவற்றை ஏந்தியுள்ளாள். ஜபமாலை, ஓயாது பல உயிர்களைப் படைப்பதையும் தாமரை அவர்களுக்கு வேண்டியதைத் தந்து காப்பதையும் குறிப்பதாகும். முன்கரங்களில் அபய முத்திரை தாங்கியுள்ளாள். மற்றோர் கரம் தொடை மீது உள்ளது. இது தாம் சர்வ சுதந்திரம் உள்ளவள் என்பதைக் குறிப்பதாகும்.

இவளுக்கு இருபுறமும் ஆதிலட்சுமியும் ஆதிசரஸ்வதியும் கைகூப்பியவாறு நின்று கொண்டிருக்கின்றனர்.

இவளை ஞானிகள் ஞானகௌரி என்பர். அதற்கேற்ப இவளுடைய சந்நிதியின் நான்கு திக்கிலும் நான்கு தட்சிணாமூர்த்திகள் உள்ளனர். (இந்த சிற்பங்கள் நிறைவடையாத நிலையில் உள்ளன.) இவளுடைய முற்றத்தில் சாத்தன் வீற்றிருக்கின்றார். அவர் 96 வகையான

சாத்திரங்களில் தேர்ச்சி பெற்ற பெரும்பண்டிதன் என்றும், பழமறைச் சாத்தன்என்றும்கூறப்படுபவர்ஆவார்.

இவளுடைய வாயிலில் சங்கநிதியும் பதுமநிதியும் காவலர்களாக உள்ளனர். ஆதிகௌரி என்றும் மகாகௌரி என்றும் கொண்டாடும் இந்த ஞானகௌரியை ஆகமங்கள் வீரசக்தி என்று கொண்டாடுகின்றன. இவளிடமிருந்து யோக சக்தி, போக சக்தி என்ற இருபெரும் சக்தியர்தோன்றினர்.

சிவாகம பூஜாபத்ததி நூல்கள் அந்த இரண்டு சக்தியரின் வடிவங்களைச் சிறப்புடன்விவரிக்கின்றன. அதன்படி யோக கௌரி குங்கும வர்ணத்துடன் பிரகாசிக்கின்றாள். கைகளில் கத்தி, கேடயம், சூலம், மழு, உடுக்கை ஆகியவற்றை ஏந்தி வரிந்த ஜடாமண்டலத்துடன் பத்மாசனத்தில் வீற்றிருக்கின்றாள். காட்சியளிக்கிறாள். இவ்வடிவுடன் அவள் அம்பிகையின் அருள் பெற்று திருவிடை மருதூர் சென்று கோயில் கொண்டாள். அவளை யோகேசுவரி என்றும் கூறுவர். கல்வெட்டுக்கள் அவளை யோகிருந்த பிடாரியார் என்று கூறுகின்றன. இந்நாளில் இவள் மூகாம்பிகை என்று அழைக்கப்படுகிறாள்.

அருள்மிகு கிரிகுஜாம்பிகை சன்னதி கோபுரவாயில்

திருநாகேஸ்வரம்.

மற்றொரு சக்தியான போககௌரி அல்லது போக சக்தி திருப்புறம்பியம் சென்று தங்கினாள். அவள் நான்கு கரங்கள் கொண்டவள். இடையில் ஆறுமுகப் பெருமானைத் தாங்கியுள்ளாள். நடைமுறையில் இவ்வாறு இருப்பினும் பூஜாபத்ததி நூல்கள் போக கௌரியை கருநிறம் கொண்டவளாகவும் தண்டம், வில், பாசம் அபயம் தரித்தவளாகவும் கூறுகின்றன. திருப்புறம்பய நாயகி குகாம்பிகை என்று அழைக்கப்படுகிறாள். இவள் தனி மண்டபத்திலுள்ள சந்நிதியில் உள்ளாள். இங்கே சிவபெருமானுக்குரிய அம்பிகை கரும்பன்ன சொல்லம்மை எனும் பெயரில் தனிச்சந்நிதியில் உள்ளாள்.

இந்த மூன்று தேவியர்களும் சிவாலயத்தில் சிவனுக்குரிய அம்பிகையாக இல்லாமல் தனியான சுதந்திர சக்தியாகவே உள்ளனர். குன்றுமாமுலையாள் கிழக்கு நோக்கியும், யோகாம்பிகை (மூகாம்பிகை) வடக்கு நோக்கியும், குகாம்பிகை தெற்கு நோக்கியும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நவராத்திரி விழாவில் இந்த மூன்று சக்திகளையும் முறையாக வணங்கினால், விரும்பியதை வேண்டியவாறு பெறலாம். காலையில் புறம்பயத்து குகனுடன் கூடிய குகாம்பிகையையும் நண்பகலில் குன்றுமாமுலையாளையும், மாலையில் திருவிடை மருதூர் மூகாம்பிகையையும் வழிபடுதல் பன்மடங்கு பலன்தரும்.

பூசை.ச.ஆட்சிலிங்கம்

புலவர், அருள்மிகு கபாலீச்சரம்

திறை கொள்ளும் இறை

தமிழாகரர் தெ.முருகசாமி
புதுச்சேரி - 9

''சதுரனெழில் சோண சைலற் றுதிப்பன்
மதுரமொழி அன்பர் மனமாம் - குதிரை திறை
கொண்டவனென் றேத்தும் குரைகழற்கால்
யானைத் திறை
கொண்டவனை என்னுளத்தே கொண்டு''.

இது, கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாசசுவாமிகள் பாடியருளிய சோணசைல மாலை என்னும் நூலின் விநாயகர் வணக்கப் பாடலாகும். இவ்விநாயகர் ஞானத் தபோதனர்களை வாவென்றழைக்கும் திருவண்ணாமலைக் கோயிலில் கிளிக்கோபுரப் படிகளுக்கு தெற்கில் உள்ள அழகிய வேலைப் பாடமைந்த சிறு கோயிலில் வீற்றிருக்கும் மூர்த்தி ஆவார். இவர் பொதுவாகக் குளத் துறையில். படித்துறையில். மரத்தடியில் வீற்றிருக்கும் மூர்த்தியைப் போல்பவர் அல்லர். அன்பரின் மனமாகிய குதிரையைத் திறைப் பொருளாக வாங்கிக் கொள்ளும் இயல்பினர், இது மட்டுமின்றித் திருவண்ணாமலைப் பாங்கரை ஆண்டு வந்த முகிலன் என்ற ஓர் அரசனிடம் யானைகளைத் திறைப் பொருளாகவும் பெற்றுக் கொண்டவர். இப்படியாகக் குதிரை, யானைகளைக் கப்பமாகக். கொள்ளும் விநாயகரை மனதில் கொண்டு அண்ணாமலையானைப் பாடித்துதிக்க முனைவதாகச்சிவப்பிரகாசர்கூறுகிறார்.

சுவாமிகள் வணங்கும் இவ்விநாயகர். வீர விநாயகர் எனத் தெரிகிறது. பல்வேறு விநாயகர் மூர்த்தங்களுக்கு வேறானவராக இவர் காணப்படுகிறார். சிந்தாமணி விநாயகர், வக்கிர துண்டவிநாயகர், பாலச்சந்திர விநாயகர், மயூரேசவிநாயகர், தூமகேது விநாயகர். வல்லபை விநாயகர் என்ற முப்பத்திரண்டு விநாயக மூர்த்தங்களுள் இந்த விநாயகர் ஒருவராகக் காணப்படவில்லை. அதாவது விநாயகர் புராணம் கூறும் விநாயக மூர்த்தங்களுக்கு வேறுபட்ட நிலையில் பிறரிடம் திறை பொருள் வாங்கும் இறைவனாகக் கூறப்பட்டுள்ளதால் இவ்விநாயரை அரசவிநாயகராகக் (ராஜ விநாயகர்)



கொள்ளலாம். எதையும் மறித்தோடிப்புதுமையாகச் சிந்திக்கும் இயல்புடைய சிவப்பிரகாசசுவாமிகள் முதற்கடவுளான விநாயகரைப் புதுமையுடையவராகக் கண்டு வணங்குவதும் புதுமையாக உள்ளது.

அரசர்கள் காலத்தில் பேரரசனாக உள்ளவனுக்குக் குறுநில மன்னர்கள் கப்பம் செலுத்துவர். அவ்வாறே இவ்விநாயகர், தம்பால் நேயம் மிக்க அன்பர்களிடம் ஒரு வகையான கப்பத்தையும் தன் பகைவனிடம் ஒருவகையான கப்பத்தையும் வாங்கிக் கொள்கிறார்.

விநாயகர் பெறும் திறைப் பொருள்கள் இரண்டும் வேறு வேறானவை. மதுரமொழியாகத் தம்மைத் துதித்துப் பாடும் அன்பரின் மனமாகிய குதிரையைத் திறையாகக் கொள்பவர் பகைவனாகிய முகிலனிடம் யானைப் படையைப் பெறுகிறார். ஈண்டு கூறப்படும் குதிரை. யானை என்பன உயிரினத் திறையாகத் தெரிந்தாலும் இவைகள் உயிர்ப்பான தத்துவக் குறியீட்டுச் சொற்களாகும்.

''மனமெனும் வயமா என் வயப்படாமல்
மயங்குறும் ஐம்புல வீதி
மறிபடாது ஓடுகின்றது முறையோ?''

எனத்தம்மை ஏமாற்றும் மனமாகிய குதிரையின் சேட்டையைச் சுவாமிகள் இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார். இட்டலிங்கப் பெருமான் தமது மனக் குதிரையை அடக்க வேண்டும் என்பது சுவாமிகளின் விருப்ப வேண்டுகோள். இந்த குறிப்பின் படிப்பார்த்தால் விநாயகர் அன்பர்களின் மன ஓட்டத்தைக் கட்டுப்படுத்த வல்லவர் எனத் தெரிகிறது. இதனையே சிவப்பிரகாசர், மனக்குதிரையைத் திறையாக வாங்குபவர் என்ற தன் கருத்தாகும் எனலாம்.

இக்கருத்தை மற்றோர் வகையாகவும் சிந்திக்கலாம். ஒருபொருளைக் கொள்ளும் போது விலை கொடுத்தே கொள்ள வேண்டும். மனமாம் குதிர்ரயை எந்த விலை கொடுத்து வாங்கினார் என்பதற்குப் பாடலில் விடை இல்லை. ஆனால் மற்றோர் பொருளை வாங்குவதாகக் கூறும் கருத்திலிருந்து குதிரைக்கு எதை விலையாகக் கொடுத்தார் என்பதை உணர வாய்ப்புள்ளது.

முகிலன் என்பான் மக்களைத் துன்புறுத்தி ஆண்டு கொண்டிருந்தான். துன்பம் தாங்காத மக்கள் ஒன்று திரண்டு, அண்ணாமலையில் தவம் செய்து கொண்டிருந்த குரு நமசிவாயரிடம் முறையிட்டனர். அவர் அருணாசலேசரிடம் பக்திப் பரவசத்தால்



பாடல் ஒன்றைப் பாடி மக்களின் குறையைப் போக்க விண்ணப்பித்தார்.

''சூலம் கரத்திருக்கச் சோதிமழு வாளிருக்க
ஆலமுண்ட காலத் தருளிருக்க - மேலே
எரித்த விழியிருக்க இந்நாள்சோணேசர்
தரித்ததென்ன காரணமோ தாம்''.

இறைவன், மக்கள் படும் துன்பத்தைக் களைவதற்குரிய போர்க்கருவிகளெல்லாம் பெற்றுள்ளதோடு ஆலகால விடத்தை உண்ட போது கொண்ட அருளும் இருக்கத் துன்பத்தைக் களையாமல் காலந் தாழ்த்துவது முறையோ? என்பது குருநமசிவாயரின் விண்ணப்பம். இவ்விண்ணப்பத்திற்கு இரங்கிய அண்ணாமலையார், தாமே செல்லாமல் வளரும் தலைமுறையினர்க்குப் பயிற்சியளிப்பார் போலத் தம் மூத்தமகன் விநாயகரை அனுப்பி முகிலனை அடக்கி ஒடுக்கி வரச் செய்தார். இந்நிலையில் விநாயகர் முதலில் முகிலனின் கனவில் தோன்றி மருட்ட, அச்சப்பட்ட அவன் தன் குறை உணர்ந்து மறுநாள் யானைகளைக் கப்பப் பொருளாகக் கொணர்ந்து தந்து வணங்கினான் என்பது புராணவரலாறு.

இவ்வரலாற்றில் விநாயகர் யானையைத் திறையாக வாங்க, அச்சத்தைக் கொடுத்துள்ளார் எனத் தெரிகிறது. அச்சத்தின் முதலீட்டுக்கு முகிலன் தந்த யானைகளாகிய திறைப் பொருள் ஆதாயம் என்பதைப் போலமுன்னர் குறித்த மனமாகிய குதிரையை வாங்க அன்பர்களுக்கு அருளை முதலீடு செய்துள்ளார் என்பது தெளிவாகிறது. ஈண்டு அருளும் அச்சமும்

விலைப் பொருள்கள், மனமாம் குதிரையும் யானையும் வாங்கு பொருள்களாக இருப்பதை உணரும் போதுதான் விநாயகர் தம் திருவடி வணங்குவார்க்கு அருளும் தொழாதவர்க்குத் துன்பமும் தருவார் என உணரச்செய்கிறார்சிவப்பிரகாசர்எனலாம்.

ஈண்டு கூறப்பட்ட குதிரை யானைகள் திறைப் பொருளாக உணரப்பட்டாலும் அவைகள் தத்துவ நிலையில் மூச்சுக் காற்றின் உண்மையை உணர்த்தும் குறியீட்டுச் சொற்கள் எனக் கருதவும் இடம் உண்டு. விநாயகர் அகவலில் ஔவையார் மூலாதாரத்து மூண்டெழு கனலைக் காலால் எழுப்பும் கருத்தறிவித்தே எனக் கூறுகிறார். இவ்வரிகள் அடக்கியும் விட்டும் கொள்ளும் மூச்சுப் பயிற்சியின் பலனைக் கூறும் ஒன்றாகும்.

''குதிரை கட்டிய லாயத்திலே
மனக்கோட்டையிலே
சந்தைப் பேட்டையிலே
எதிரிதான் வந்து தட்டுகிறான் ஏதென்று
கேளடீ ஞானப் பெண்ணே!''

எனக் குதிரையை மூச்சுக்காற்றாக ஞானசித்தர் குறிப்பிடுகிறார். இதுபோலவே யானையின் பலம் அதன் தும்பிக்கையிலே என்றதன் கருத்தும் இம்மூச்சுக் காற்றின் அளவைக் கொண்டு கூறப்பட்டதாக உணரலாம். பெரிய உருவத்திற்கேற்ப அதிகமான காற்றை உள்ளே இழுத்து வெளிவிடுவதற்கேற்ற நீண்ட துதிக்கை, யானைக்கு உதவியாக உள்ளது. யானையின் உயிர்ப்பே அதன் துதிக்கை மூச்சால் உள்ளது. அதற்கு சிறு ஊறு நேர்ந்தாலும் உயிர்வாழாது. இவ்வுண்மையையே திருவானைக்காவில் காதில் சிறு சிலந்தி, யானையின் காதில் நுழைந்து துன்புறுத்தாமல் துதிக்கைக்குள் புகுந்து காற்றைத் தடைப்படுத்தியன் மூலம் யானை மாய்ந்து விடுவதைக்காண்கிறோம். எனவே சிவப்பிரகாசர் உணர்த்தும் குதிரை யானை என்ற உயிரினக் குறியீடுகள் மனித உயிர்ப்பை உணர்த்திக் காட்டும் தத்துவக் குறிப்புகள் எனலாம், உடலைப்பிராணாயாமம், யோகம் போன்றவற்றால் காற்றை அடக்கியாளும் திறத்தால் உயிர் நிலைபெறும் என்ற உண்மையின் குறியீடுகளே அவைகள், இந்த உண்மையை வெளிப்படையாகக் காட்டவே விநாயகர் சிலையின் இருபுறமும் இரட்டை வடிவப் பாம்பு சிலைகளைப் பிரதிட்டை செய்கின்றனர். முதுகுத் தண்டின் வடிவ அமைப்பின் அடையாளமே பின்னிக் கொண்டிருக்கும் இரட்டைப் பாம்பின் வடிவங்களாகும்.

காற்று எங்கும் வியாபித்துள்ள தானாலும் அதைப் பயன்படுத்தும் முறையால் சிறந்த வாழ்வு உண்டு என்பதை உணர்த்தவே விநாயகரைக் கோயிலுக்கு உள்ளே வைத்திருப்பதைப் போல வெளியேயும் பிறபிற இடங்களிலும் (ஆற்றங்கரை, குளத்துக்கரை, மரத்தடி, தெருமுச்சந்தி என சிறு சிறு கோயில்களில் வைத்து வணங்குமாறு ஆன்றோர் நெறிப்படுத்தினர்.

இப்பாடலில் விநாயகர் திறைப் பொருள்களைப் பெறுவதால் அரசரைப்போல் உருவகிக்கப்பட்டாலும் குதிரையைக் கொள்வதற்கேற்பக் குதிரைச் சேவகனைப் போலவும் யானையை அடக்கியாளும் பாகனைப் போலவும் காணும் குறிப்பும் தொனிக்கிறது.அதாவது விரைந் தோடும் குதிரையை மட்டுப்படுத்திச் செலுத்த சேவகன் தன் கையில் சாட்டை வைத்திருப்பது போல விநாயகர் தம்மிடம் அங்குசம் கொண்டுள்ளார் எனலாம். இது விரைந்தோடும் காற்றின் இயல்பை மட்டுப்படுத்திச் சீராக வாங்கச் செய்யும் (யோகம், பிராணாயாமம்) முறையைக் கூறுவதாகும். இதைத்தான் வடலூர் வள்ளலார்.

''வாசிவாசி என்கிறார் வெண்ணிலாவே
- அந்த
வாசி என்ன பேசு கண்டாய்
வெண்ணிலாவே!''

என்று கூறுகிறார், நாம் விடும் மூச்சுக்கு வாசி என்று யோக சாத்திரத்தில் பெயருண்டு, இச்சொல்லைத் திருப்பி வாசித்தால் சிவா என்றாகி விடும். எனவே உயிர் மூச்சுக்குள் சிவம் அடங்கிக் கிடக்கிறது என்பது கருத்து.

மதம் பிடித்த யானையைக் கட்டிப் போடக்கயிறு உள்ளது போல விநாயகர் பாசக்கயிற்றைக் கொண்டுள்ளார். மூச்சுத் திணறலான நிலை கலங்கும் போது உண்மைப் பக்தனைக் கலங்காமல் வீட்டின்பக் கட்டுத்தறியில் விநாயகர்கட்டிப் போடுவார் என்ற குறிப்பிற்காகப் பாசக்கயிற்றைக் கொண்டுள்ளார். ஆதலின் சிவப்பிரகாசர் வணங்கிய அண்ணாமலையில் உள்ள அந்த ராஜ கணபதியை வணங்கி அரசவாழ்வைப் பெற விநாயகர் சதுர்த்திப் பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்வோமாக!

குலசேகராழ்வாரும் திருவரங்கனும்

வைணவமணி புலவர். ஏ.பரந்தாமன்

சென்ற இதழ் தொடர்ச்சி...



கடந்த எட்டு பாசுரங்களில், திருவரங்கனை நாம் நம் கண்களால் கண்டு களிப்பது, நம் வாயினால் வாழ்த்துவது அடியவரோடு அணுகுவது, கைகளால் மலர் தூவி கூப்புவது தலையினால் வணங்குவது, உள்ளம் உருகுவது, கண்களில் நீர்மல்க நிற்பது, வாழ்வாங்கு வாழும் நாளை எதிர்நோக்குவது போன்றவற்றைக் கண்டோம். இனி,

''கண்டு துள்ளி பூதலத்தில் புரளும் நாள் என்று கொலே''

பகவத் தொண்டில் எப்பொழுதும் ஆர்வம் உள்ளவர்கள் திருமால் அடியவர்கள். அத்திருமால் ஆழ்வாருக்கு அடியார்கள் குழுவில் சேர்ந்து, எம்பெருமான் புகழினை வாயாரச் செல்லி, அவனது திருவடிகளை வணங்கியும் மனநிறைவு ஏற்படவில்லை மனம் களிப்போடு கண்களில் நீர் மழையாகப் பெருக்கெடுத்து ஓடின. எம்பெருமானையே நினைந்து நினைந்து மனம் உருகி வழிபட்டேன் என்கிறார்.

கடலின் ஒலி போல் மங்கல ஒலி, ஒலித்துக் கொண்டே இருக்குமிடம் திருவரங்கக் கோயில். அத்திருவரங்கத்தில் பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் திருவரங்கன், போர்த் தொழிலில் வலிமை வாய்ந்த திருச்சக்கரப்படையைத் தன் வலதுகரத்தில் ஏந்தியுள்ளான். அத்தலைவனை கண்களால் கண்டு, ஆர்வத்தால் உள்ளம் பொங்கத் துள்ளிக் குதித்து மண்ணில், பக்திப் பரவசத்தால் புரளும் நாள் எந்த நாளோ என்று ஏங்குகின்றார் குலசேகராழ்வார். அது தான் இன்று அங்கப் பிரதட்சணம் என்று வழங்கப்படுகிறது.

பாசுரம் - 9

தூராத மனக்காதல் தொண்டர்தங்கள்
குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக்களிப்போடு அழுத கண்ணீர்
மழைசோர நினைந்துருகி ஏத்தி நாளும்
சீரார்ந்த முழவோசைபரவை காட்டும்
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்
போராழி அம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்று கொலோ புரளும் நாளே!

(பெருமாள் திருமொழி 1-9)

இசைந்து உடனே என்று கொலோ இருக்கும் நாளே!

(பெருமாள் திருமொழி 1-10)

அழியாத பெருமையை உடைய விண்ணுலகம் கடைத்தேறவும், ஆங்குள்ள தேவர்கள் வாழவும், மண்ணுலக மக்கள் வாழவும், இவர்களை யெல்லாம் பற்றித் தொடரும் மிகுந்த துன்பங்களும், துயரங்களும் நீங்கவும், எல்லையில்லாத இன்பம் தோன்றவும், தன்னை, மன மகிழ்வோடு வழிபடும் தொண்டர்கள் சம்சாரக் கடலிலிருந்து விடுபடவும், அருள் மிகுந்து திருவுள்ளம் பற்றி, தென்திசையை நோக்கி பள்ளி கொண்டிருக்கின்றான் திருவரங்க நாதன். அவன் கருவறையின் முன் நின்று, வழிபடும் இன்பம் மிகுந்த திருமாலடியார்களின் கூட்டங்களில் யானும் ஒருவனாக மனமுவந்து இருக்கும் நாள் எந்த நாளோ என்று ஏங்குகின்றார் குலசேகராழ்வார். ஏனெனில் தனி ஒருவனாக இருந்து வழிபடுவதை விட், கூட்டமாக இருந்து வழிபடுவதையே விரும்புகின்றான் திருவரங்கன்.

திருவரங்கன் ஏன் தென்திசையை நோக்கிப் பள்ளிக் கொண்டிருக்கிறார் என்பதைக்காண்போம்

இராமன் முடி சூட்டுவிழா முடிந்து, விபீடணாழ்வார் இலங்கை திரும்புமுன், இராமபிரானிடம் அவர்கள் குலதெய்வமாகிய திருவரங்கன்

திருமேனியைத் தரும்படிவேண்டினான். இதனால் பாழான இலங்கை மீண்டும் பழைய நன்னிலைக்கு வரும் என எண்ணினான் விபீஷணாழ்வார். அங்கு செல்ல விரும்பாத திருமால் ஒரு நிபந்தனையை வைத்தார். இத்திருவரங்கன் திருமேனியை மண்ணில் வைத்தால் மீண்டும் எடுக்க இயலாது என்பதே நிபந்தனை.

விபீஷணன் காவிரிக் க்ரையை அடைந்ததும் களைப்பு மிகுதியில் மேலே செல்ல இயலாமல் திருவரங்கன் திருமேனியை கீழே வைத்து விட்டு நீராடித்திரும்பி வந்து, திருமேனியை எடுக்க இயலாமல் தவித்தான். வெம்பினான். பின்னர் திருவரங்கனிடம், அவன் தன் இலங்கை இருக்கும் தென் திசைநோக்கி பள்ளி கொள்ளும்படி வேண்டினான். விபீடணன் விருப்பத்திற்கு இணங்கி திருவரங்கன் மேற்கே திருமுகத்தையும் கிழக்கே திருவடிகளையும் வடக்கே திருமுதுகையும் தெற்கே தன் முகத்தையும் வைத்து பள்ளி கொண்டான்.

''மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கை
திசைநோக்கி மலர்கண் வைத்த என்னுடைய

திருவரங்கன் என்று பெரியாழ்வார் பாடியருளினார். இதனையே தொண்டரடிப் பொடியாழ்வாரும்

''குடதிசைமுடியை வைத்துக் குணதிசை
பாதம் நீட்டி வட திசைபின்பு காட்டி
தென்திசைஇலங்கை நோக்கிக் கடல்நிறக்
கடவுள் எந்தை அரவணைத் துயிலும் மால்.-
என்று பாடினார்

காவிரி- கொள்ளிடம் ஆகிய இரு நதிகளுக்கிடையில் அமைந்த மணற்குன்றில் அமைந்த திருவரங்க நகரில் பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் கடல்நிற வண்ணம் போன்ற திருமேனியையுடைய திருவரங்க நாதனைக் கண்களால் நிறைவாகக் கண்டுகளிக்க வேண்டுமென்று ஆவலுடன் இருந்தார் குலசேகரப்பெருமாள். எனவே அரசர்களுக்குரிய வெண் கொற்றக் குடையையும் ஆற்றல் மிக்க படைகளையும் வெற்றி தரும் ஒப்பற்ற வாளையும் உடைய, மதுரை நகர மக்களுக்குத் தலைவரும் கை வண்மை மிக்கவருமான குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த, நல்ல தமிழ் நடைமிக்க பாமாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் பாட வல்லவர்கள் நன்மையே திகழக் கூடிய நாராயணனின் திருவடிகளைத் தவறாமல் அடைவார்கள். என்பதனை

''திடர் விளங்கு கரைப் பொன்னி நடுவுபாட்டுத்
திருவரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
கடல்விளங்கு கருமேனி அம்மான் தன்னைக்
கண்ணாரக் கண்டு உகக்கும் காதல் தன்னால்
குடைவிளங்கு விறல் தானெக் கொற்ற ஒள்வாள்
கூடலர்கோன் குகனெடக் குலசேகரன் சொல் செய்த
நடைவிளங்கு தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே''

என்றும் இப்பாடல்களைப் படிப்பதால் உண்டாகும் பயனையும் கூறியுள்ளார்.

(பெருமாள் திருமொழி 1-11)

குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்.

வேதாரண்யம்

(க. சுகுமாரன், மன்னார்குடி)

இந்திய நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக உயர்ந்த தத்துவங்களை, உணர்வுகளை உள்ளடக்கி நம் உள்ளங்களை உயர்நிலைக்கு எடுத்துச் செல்பவை வேதங்கள் என்னும் இறவாக்கலைகள்.

வேதங்களைப் படிக்க படிக்க அது நம்மை படிப்படியாக பரமனின் முன் கொண்டு நிறுத்தும் தகைமை உடையவை.

தெய்வத்தைத் திறந்து காட்டும் திருக்கதவுகளாகவே அவை திகழ்கின்றன. அந்த வேதங்களே பரமனை அர்ச்சித்தனவாம். ஒரு நாள்அல்ல, பலநாள் அல்ல. நீண்ட நெடுங்காலம் அர்ச்சித்தனவாம். அப்படிப்பட்ட ஓர் இடம் எவ்வளவு புண்ணியத் தலமாகத் திகழும் என்று எண்ணிப்பாருங்கள்! அதுதான் வேதாரண்யம் என்னும் திருமறைக்காடு (வேதம் - மறை, ஆரண்யம் - காடு) என்றும் அழைக்கப் பெறும் புண்ணியத்தலம். நாகை மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் திகழும் மூதூர்.

இயற்கையின் எழிற் செம்மையும், செல்வச் செழுமையும் நிறைந்த ஊர் வேதாரண்யம் என 1400 ஆண்டுகளுக்கு முன்னரே அப்பர் அடிகளும், ஞானசம்பந்த பெருந்தகையும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட காட்சி எல்லாம் இன்றும் நிறைந்து விளங்கும் ஊர் இவ்வெழில் ஊர். இயற்கை எழிலால் கவரப்பட்டு, வேதங்கள் இங்கு வந்த பரமனின் பாதங்களைப் போற்றி மலரால் வழிபாடு செய் மாமறைக்காடு என்கிறார் திருஞானசம்பந்தர். அவர் இப்பதியை மறைவனம் என்றும் கூறுகிறார். மறை எனும் தமிழ்ச் சொல்லும், வனம் எனும் வடமொழிச் சொல்லும் இணைந்த பெயரால் அழைக்கிறார்.

ஆம் ஆரியமும், தமிழும் சேர்ந்து இறைவனை துதிக்கும் ஊர் இது. துதிப்பவை வேதங்கள், துதிக்கப்படும் இடம் தமிழகத்தில் இருக்கும் தனிப்பெரும் மூதூர். ஆதலின் இதைத் தமிழ் பரப்ப வந்த ஞானசம்பந்தர் வேத வனம் என்று அழைக்கிறார்.

அப்பர் பெருமானோ இங்கு உறையும்



பரமனை ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய் என இவ்வூர் பதிகத்தில் குறித்து மகிழ்கிறார். இந்த ஊரில் திகழ்வது வேதாரண்யேசுவரர் திருக்கோயில். இங்கு ஓர் அற்புதம் நிகழ்ந்தது. நாவுக்கரசரும்.

ஞானசம்பந்த பெருந்தகையும் சேர்ந்து இந்த ஊருக்கு வருகிறார்கள். சிவத்தலங்களைத் தரிசித்து வருகிறார்கள். இரு பெரியோரும் இவ்வூர் எல்லையை அடைந்த போது அரஹரா! அரஹரா! என்னும் ஒலி இரு விசும்பும் திசைஎட்டும் எதிரொலித்ததாம். அவ்வொலி கடல் திரை ஒலிக்கும் பேரொலியையும் அடக்கி விண்ணை அடைந்து உம்பர் நாட்டுக்கு அப்புறத்தும் சென்றதாம்.

தமிழகத்தையே தமது தெய்வப் பதிகங்களால் உய்விக்க வந்த இரு பெரும் சமயத் தலைவர்கள் இணைந்து வரும் பேறு பெற்றதெனில், அதன் புகழ் விண்ணகமும் கடந்து நின்றதெனில் அது இயல்பு அன்றோ! அந்த நிகழ்ச்சியை பக்திப் பெருக்கோடும் கவிதை உள்ளத்தோடும் நினைத்துப் பார்க்கிறார் சேக்கிழார்.

சொல்லரசருடன் கூடப் பிள்ளையாரும்

''தூமணி நீர் மறைக் காட்டுத் தொல்லை மூதூர்

மல்கு திரு மறுகின்கண் புகுந்த போது

மாதவர்கள் மறையவர்கள் மற்றும் உள்ளோர்

எல்லையில்லா வகை 'அர' என்றெடுத்த ஓசை

இரு விசும்பும் திசைஎட்டும் நிறைந்து பொங்கி

ஒவ்வொலி நீர் வேலை ஒலிஅடக்கி, விண்மேல்

உம்பர் நாட்டு அப்புறத்தும் உற்றதன்றே''

என்று உருவகித்துப் பாடியுள்ளார் சேக்கிழார்.

திருமறைக்காடு வந்த இரு தேவாரப் பெரியார்களும் கோபுரத்தைத் தாழ்ந்து, இறைஞ்சி கோயிலின் உள்புகுந்து வலம் வந்து நின்றனர்.

கர்ப்பகிரகத்துக்கு முன் இருக்கும் நேர்முக வாயில் கதவுகள் மூடியிருந்தன.

வேதாகமம் பயின்று கோயிலில் அர்ச்சிக்கும் பெரியவர்கள் நேர்வாயில் வழியாகச் செல்லாமல் பக்கத்து வாயில் வழியாகவே உள்ளே சென்று பரமனைப் பூசித்துத் திரும்புவதைக் கண்டு வியப்புற்றனர். அதன் காரணம் கேட்டனர்.

முன்னாள் வேதங்கள் மலரால் வழிபட்டு கதவுகளுக்குத் திருக்காப்பிட்டன.



அதன் பின்னர் அர்ச்சிக்கும் பெரியோர்களால் அக்கதவுகளை திறக்க இயலவில்லை. ஆதலால் பக்கத்தில் ஒரு வழி செய்து இக்கோயிலில் வழிபட்டு வருகிறோம் என்று அவர்கள் கூறினர். இதைக் கேட்ட சம்பந்தர் வேத வனத்து சுடர் சோதியை, பசுபதியை, அமரர் சூளாமணியை, நாம் நேரே உள்ள திருவாயில் வழியாகச் சென்று வணங்க வேண்டும். இக்கதவும் திறக்க நீரே பதிகம் பாடி அருள வேண்டும் என அப்பரை வேண்டிக் கொண்டனர்.

அப்பர் பெருமானும் அவ்வாயில் முன் நின்று

''பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ

மண்ணினார் வலஞ்செய் மறைக் காடரோ

கண்ணினால் உமைக் காணக் கதவினை

திண்ணமாகத் திறந்தருள் செய்மினே''

என்று தொடங்கிப் பத்துப் பாடல்களைப் பாடினார். பதினோராவது பாடலான திருக்கடைக்காப்பு பாடியதும் கதவுகள்தாமாகத் திறந்தன.

அப்பரும் சம்பந்தரும் திருவாயில் வழியாக உள்ளே சென்று வணங்கினர். அவர்கள் இருவரும் அவ்வாறு உள்ளே சென்று வழிபட்டதைச் சேக்கிழார் மனம் நெகிழப்பாடுகிறார்.

''கோயில் உட்புகுவார் உச்சி குவிந்த செங்கைகளோடும்

தாயினும் இனிய தங்கள் தம்பிரானாரைக் கண்டார்

பாயும் நீர் அருவிக் கண்கள் தூங்கிடப்படியின் மீது

மேயின மெய்யராகி விழிப்புற்று விரைவில் வீழ்ந்தார்''

''அன்பினுக்கு அளவு காணார் ஆனந்த வெள்ளம் மூழ்கி

என்பு நெருக்குருக நோக்கி இறைஞ்சி நேர்விழுந்து நம்பர்

முன்பு நிற்பதும் அற்றார் மொழி தடுமாற ஏத்தி

மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார்''.

வேதாரண்யம் கோயிலில் பக்திப் பெரு வெள்ளத்தில் மூழ்கித் திளைத்த வாகீசரையும் ஆளுடைய பிள்ளையையும், கவியரசாம் சேக்கிழார் மேற்குறித்தவாறு நமக்குக் காட்டுகிறார். ஆம்! வேதங்கள் அர்ச்சித்து மூடிய கதவுகளை எவராலும் திறக்க முடியவில்லை. தேவாரப் பதிகம் பாடியதும் வாயில் திறந்தது.

அப்பரும், சம்பந்தரும் பாடிய தேவாரப் பதிகங்களும் வேதங்கள் தாம். வேதங்களே வந்து திறந்தது போல் தேவாரப் பதிகங்கள் பாடியதும், நெடுங்காலமாக மூடி மறைத்திருந்த கதவுகள் திறந்தன. திருக்காப்பு நீங்கின. பரமனை வணங்கி வெளி வந்ததும் அப்பர் வேண்ட சம்பந்தர் ஒரு பதிகம் பாடினார்.

''சதுரம் மறைதான் துதி செய்து வணங்கும்

மதுரம் பொழில் சூழ்

மறைக்காட்டுறையும் மைந்தா!

இதுநன்நிறை வைத்தருள் செய்க எனக்கு உன்

கதவம் திருக்காப்புக்கொள்ளும் கருத்தாலே''

என்று பதிகத்தில் முதல் பாடல் பாடியதும் கதவு மீண்டும் மூடிக்கொண்டது.

இந்த அற்புதம் நிகழ்ந்த இடம் வேதாரண்யம். இந்த அற்புதமான தெய்வீக நிகழ்ச்சியில் பல அரிய கருத்துக்கள் நிறைந்துள்ளன.

திருக்கோயில்களின் பூஜை முடிந்ததும் கதவுகளைச் சாத்தித் தாழிட்டுப் பூட்டுவதும், பூஜையின் ஓர் அங்கம்தான். அதற்கு தனி மந்திரங்களும் வழிபாடும் உண்டு. அதை திருக்காப்புச் செயல் என்று அழைப்பர். கதவு திறக்கும் போது வழிபாடு செய்து பின்னர் தான் திறத்தல் வேண்டும். இதைத் திருக்காப்பு நீக்கல் என்பர்.

இந்த மரபு சம்பந்தர்.அப்பர் காலத்துக்கும் முன்பிருந்தே (1400 வருடங்களுக்கு மேலாகவே) தமிழ்நாட்டில் நிலவி வந்திருக்கிறது என்பதை அறிகிறோம்.

வேதாரண்யம் கோயில் திருக்காப்பிட்டதைச் சேக்கிழார்.

''மறை அர்ச்சித்துக் காப்புச் செய்த

பைம் பொன் மணித் திருவாயில்''

என்று பாடுகிறார்.

தேவாரப் பதிகங்கள் வேதங்களே என்ற கருத்தும் இந்நிகழ்ச்சியால் பெறப்படுகிறது.

அப்பர் பெருமான் தமது திருமறைக்காடு திருத்தாண்டகத்தால் இவ்விறைவனை முத்தமிழும், நான்மறையும் ஆனான் கண்டாய் என்று பாடியிருப்பதும் இதனையே குறிக்கிறது.

தமிழுக்கு முரண்பாடாக வேதமோ, வேதத்துக்கு முரணாகத் தமிழோ இல்லை. இருக்கவும் முடியாது. ஏனெனில் இரண்டுமே இறைவனின் உருவம் தான். ஆன்மீகத்திலே தேவாரப் பதிகங்களிலே சைவத்திலே பற்று கொண்ட எவருமே ஒன்று சிறந்தது, மற்றது கூடாது என எண்ண முடியாது. அதைத்தான் வேதம் அர்ச்சித்துப் பூசித்து மூடிய கதவுகள் தெள்ளுத் தமிழ்த் தேவாரப் பதிகங்கள் பாடியதும் திறந்தன என்னும் அதிசயப் பாங்கை வேதாரண்யத்தில் காண்கிறோம்.

மறைக் காட்டின் மாண்பை அறிந்து வணங்கி வாழ்வோம்.

நக்கீரர்

- தமிழ்ச் சங்கத்தின் கடைச்சங்கம் கி.பி. முதல் நூற்றாண்டில் நடைபெற்றது. அக் கடைச்சங்கத்தில் 49 புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தனர். அவர்களுக்குத் தலைமைப் புலவர் நக்கீரர்.

- திருவள்ளுவர் திருக்குறளைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றியபோது சங்கத்தின் தலைமைப் புலவராக இருந்தவர் நக்கீரர். திருக்குறளைப் பாராட்டி இவர் ஒரு சாற்றுகவி பாடி இருக்கிறார்.

- இவரைக் கணக்காயனார் மகனார் நக்கீரன் என்று சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. கணக்காயனார் என்பது ஆசிரியர் என்று பொருள்படுவதால் இவர் தந்தையார் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிய ஆசிரியர் என்றும் அவர் அக்காலத்தில் பிரபலமானவர் என்றும் தெரிகிறது.

- இவர் பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்ற இரண்டு நூல்களையும், நற்றிணையில் 7 செய்யுட்களையும், குறுந்தொகையில் 8 செய்யுட்களையும், அகநானூற்றில் 17 செய்யுட்களையும், புறநானூற்றில் 3 செய்யுட்களையும், திருவள்ளுவ மாலையில் ஒரு செய்யுளையும் பாடி இருக்கிறார்.

- இவருக்கு மதுரை சொக்கநாதப் பெருமானே இலக்கணத்தை உபதேசித்ததாக திருவிளையாடற் புராணத்தில் கூறப்படுகிறது.

- திருவிளையாடற் புராணத்தில் சங்கப் பலகை கொடுத்த படலம், தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம், கீரனைக் கரை ஏற்றிய படலம், கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம், சங்கத்தார் கலகந் தீர்த்த படலம் என ஐந்து படலங்கள் இவரைச் சுற்றியே வருகின்றன. இறைவனது விளையாடல்களை விவரிக்கும் நூலில் ஐந்து படலங்கள் இவரைச் சுற்றி இறைவன் ஆடிய ஆடல்கள் என்பது இவரது சிறப்பு.

- இவர் இறைவனது கொங்குதேர் வாழ்க்கை எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலில் பொருட்குற்றம் காட்டி இறைவனையே "நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே" என்று எதிர்வாதம் செய்த தமிழ் வீறு உடையவர்.

- இறைவன் அருளிய "இறையனார் களவியல்" என்ற நூலுக்கு இவர் எழுதிய உரை புகழ் பெற்ற உரை, தமிழ்ச் சங்கத்தின் தொன்மையும் வரலாறும் இந்த உரை நூல் இல்லையென்றால் மறைந்தே போயிருக்கும்.

- இவரது இறையனார் களவியல் உரையை முருகனே செட்டிமகனாக வந்து சபையில் அமர்ந்து கேட்டு பாராட்டினான் என்பது தொன்று தொட்டு வரும் வரலாற்றுச் செய்தி.

- இவர் எழுதிய திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டில் உள்ளதோடு இதன் அருமை கருதி பன்னிரு திருமுறையில் பதினோராவது திருமுறையிலும் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே இவர் திருமுறை ஆசிரியரும் ஆவார்.

- இவர் தமிழை விட வடமொழி சிறந்தது என்று அவையில் கூறிய குயக்கொண்டான் என்பவனை அறம்பாடிட அவன் இறந்துபட்டதாகவும், உடன் ஆன்றோர் வேண்டுகோளுக்கு இணங்கி தமிழ்பாடி அவனை எழுப்பியதாகவும் வரலாறு உண்டு. இவரது தமிழ்ப்பற்றும், இவரது தமிழின் மந்திர ஆற்றலும் இதனால் நன்கு விளங்குகிறது.

- இவரது மொழியை அருணகிரியார் வேத மொழி என்று போற்றுகிறார்.

நன்றி : "இளங்கம்பன்"
தெய்வமுரசு இதழ்

புரட்டாசியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்

உருத்திரபசுபதி
நாயனார்
- அசுவினி

ஏனாதிநாத
நாயனார்
- உத்திராடம்

திருநாளைப்போவார்
நாயனார் (நந்தனார்)
- ரோகிணி

நரசிங்க முனையரைய
நாயனார்
- சதயம்

புராதன சின்னங்களான கோவில்களில் செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை

1. பண்டைய காலத்து முறையை மதியுங்கள்

★ அக்காலத்து கலைஞர்கள், சிற்பிகள் மிகுந்த பக்தியுடனும், கலை நுணுக்கத்துடனும் கோவில்கள் எழுப்பியுள்ளனர்.

★ நம்மைவிட குறைந்த பொருளுதவியும், வசதிகளும், தொழில்நுட்பமே இருந்தாலும் நம்மை விட அதிக கவனம் செலுத்தி அவற்றை எழுப்பியுள்ளனர்.

★ அவர்களது உழைப்பை நாம் உதாசீனப்படுத்தக்கூடாது.

★ எனவே முன்னர் காலத்து சின்னங்களை சீர்செய்ய பிரிக்குமுன், அவர்களது கஷ்டங்களை உணருங்கள்.

★ பண்டை காலத்தில் என்ன பொருட்கள் உபயோகித்தனரோ, அவற்றையே உபயோகியுங்கள். வெல்லம், கடுக்காய், வச்சிரம், மூலிகைகள் கலவைகள் கொண்டு கட்டப்படும் கோவில்கள் சுமார் 1000 ஆண்டுகள் நிலைத்துள்ளன. ஆனால் சிமெண்ட் கட்டிடங்கள் அதிகபட்சமாக 100-200 ஆண்டுகளே தாக்குப்பிடிக்கும்.

2. சுவற்றில், மதில்களில், கோபுரங்களில் எந்த கட்டுமானங்கள் மீதும், சிறிய செடிகள், மரங்கள் கொடிகளை வளரவிடாதீர்கள்.

★ இவை கோவில்களை ஆட்டம் காண வைக்கும் கொடிய வில்லன்கள்!

★ மாதம் ஒருமுறை களைகளை கண்டறிந்து, களையுங்கள்

★ பழைய கற்களை அகற்றி செடிகளை நீக்குகையில், அதிக கவனம் தேவை.

★ மழைக்குப் பின் தான், களைகள் அதிகம் வளரும். மழை காலங்களில் பழைய சுவர்கள், கோவில்களில் ஏறுகையில், கவனம் தேவை. கவனக்குறைவால், அவை சரிந்து விடலாம்.

★ வேரோடு களைய முடியவில்லை என்றால், மரக்கொல்லிகளை உபயோகியுங்கள்.

★ இடுக்குகள், வேர் அறுத்த குழிகளை நல்ல சுண்ணாம்பு சுதை கரைசலினால் பூசி, மூடி விடுங்கள்.

3. தொடர்ந்த பராமரிப்பே சிறந்த வழி:

★ பழங்கால கோவில்களுக்கு தொடர் பராமரிப்பு அவசியம்

★ எந்த சிறிய கட்டிட பழுது வேலையானாலும் உடனே கவனித்து செப்பனிட வேண்டும்.

★ கோவிலை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருங்கள்.

4. தவறான பொருட்கள் உபயோகிக்காதீர்கள்:

★ கல்லால் ஆன கட்டுமானங்களுக்கு சுண்ணாம்பு, பெயிண்ட், எனாமல் உபயோகிக்கக் கூடாது.

★ சுண்ணாம்புப் பூச்சு நீக்குவது கடினம். தொடர்ந்து ரசாயனங்களால் துடைத்தால், கல்லின் தன்மை மட்டுப்படும்.

★ பெயிண்ட் நீக்குவது, இன்னும் கடினம், ரசாயன பெயிண்ட் அதிகம் கட்டிடத்தை பாதிக்கும்.

★ காவி நிறத்தை சுவர்களுக்கு உபயோகிக்காதீர்கள், அவை கரை படிந்துவிடும்.

★ சுவர்களில், தூண்களில் காணும் கல்வெட்டுக்களை மாற்றி கட்டியோ, அழித்தோ, உடைத்தோ விடாதீர்கள், அவற்றில் நம் பண்டை சரித்திரத்தின் பல அரிய செய்திகள் இருக்கலாம். அந்த எழுத்துக்கள் எத்தகையவை ஆனாலும், எத்தனை புராதனமானவையாக இருந்தாலும், படித்துக் காட்ட நம்மிடையே வல்லுநர்கள் உள்ளனர். சுவர்களில் உள்ள கல்வெட்டுக்களை பாதுகாத்திடுங்கள் சுத்தம் (sand blasting) செய்கிறேன் பேர்வழி என்று கம்ப்ரெசர் மண் அடித்து எழுத்துக்களை அழித்துவிடாதீர்கள். அவை நம் பாட்டன், முப்பாட்டனின், சாசனம்!, மீண்டும் கிடைக்காது!, அதே போல் சுத்தம் செய்ய அமிலங்களையும், ப்ளீச்சிங் பவுடர் மற்றும் வீடு துடைக்க உபயோகிக்கும் சோப்புகளையும் உபயோகிக்காதீர்கள். அவை சரி செய்ய முடியாத, கண்ணுக்குத் தெரியாத விரிசல்களை ஏற்படுத்திவிடும்.

★ பழைய ஓவியங்கள் இருந்தால் அவற்றை சுரண்டி எடுத்து விடாதீர்கள் பழஞ்சாறினாலும், இயற்கை மூலிகை நிறங்களாலும் வரையப்பட்ட

அவ்வோவியங்கள், எத்தனை கோடி கொடுத்தாலும் நாம் மீண்டும் வரைய முடியாது.

★ சிதைந்த, தனித்துவிடப்பட்ட கோவில்களின் பாகங்களை எறிந்து விடாதீர்கள்: அவை முந்தைய அசல் கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம், அவற்றை மீண்டும், பழைய இடத்திலேயே பொருத்தலாம். உபயோகிக்கலாம்.

★ பழைய செங்கல், செங்கல் துகள்கள், பழைய கோவில் சிதிலத்துகள்களை எறிந்து விடாதீர்கள். அவற்றை முழுவதுமாக அப்படியே உபயோகிக்கலாம்!. இன்றைய செங்கற்களைவிட அவற்றின் பலம், கெட்டித்தன்மை, 5 மடங்கு அதிகம்!.

★ பழைய கோவில்களுக்குள் அசிங்கமாக, வயர்களையும், எலக்ட்ரிக் பட்டிகளையும் அடிக்காதீர்கள். கோவில்களில் அகல் விளக்குகளும் தீபங்களுமே அழகு.

★ க்ரானைட், டைல்களை சர்ப்ப கிரகத்துக்குள் பதிக்காதீர்கள். பழைய கோவில்களில், அளவீடுகள் முக்கியமானவை. கருவறையின் நீள, அகலமே, சிகரத்தின் உயரத்தை முடிவு செய்யும். இதில் சிறிய மாற்றம் ஏற்பட்டால்கூட, ஸ்தபதிகளும், வாஸ்து வல்லுநர்களும் கணக்கிட்ட சிகரம் வராது, கணிதம் தப்பும். புனிதமும், பலமும் கெடும்.

★ கல் கோவில்களில் சிமெண்டால், புதிய பாகங்கள், படிகளை சேர்க்காதீர்கள். பல இடங்களில், துர்க்கைக்கும், தட்சிணாமூர்த்திக்கும் பிரார்த்தனை செய்ய, தொட்டுக் கும்பிட என, பழங்கால சுவர், சுற்று பிரகாரத்துக்கும் இடையே, ஒரு ஒட்டுப்படி சிமெண்டால் கட்டி விடுகிறார்கள். அது கட்டிடத்தின் பலத்துக்கு எதிரானது, கட்டிட சாஸ்திரத்துக்கு எதிரானது. வருங்காலத்தில் கல் சுவர் அப்படியே நிற்க, இந்த சிமெண்ட் படி விழுந்துவிட்டால் நம் வருங்கால சந்ததியர் நம்மைப் பார்த்து சிரிப்பார்கள்!.

★ சிமெண்டை தவிருங்கள். சுதையே நல்லது. சுண்ணாம்பு அதிகமாகவும், தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

★ சிலைகளில் எண்ணெய், வெண்ணெய் நீண்ட காலமாய் தடவுவதன் மூலம், சிற்பங்களின் முனைகள் மழுங்கி, அழகு குறைந்துவிடும். இவற்றைத் தவிர்த்தால் நல்லது.

★ கற்பூரம் ஏற்றாதீர்கள், அதிலிருந்து வெளிப்படும் கரித்துகள்கள் கோவில் முழுதும் அடைந்து, மாசு படிந்துவிடும். காற்றிலும் கலக்கும். நல்ல ஓவியங்கள் போன்றவற்றை பாழ் செய்துவிடும். எண்ணெய் விளக்கு, நெய் தீபாரததனையே நல்லது. அழகு, மாசு கட்டுப்பாடும் இருக்கும்.

நன்றி - திரு. தியாக. சத்யமூர்த்தி
அகழ்வாராய்ச்சிக் குழுத் தலைவர் - ASI ஓய்வு
ஸ்தாபகர் - REACH foundation

61 ஆவது சுதந்திர தின விழா சமபந்தி பொது விருந்து

சென்னை, நுங்கம்பாக்கம் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில் சமபந்தி பொது விருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்

மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா.ஆவுடையப்பன் அவர்கள், கீழ்ப்பாக்கம், அருள்மிகு பாதாள பொன்னியம்மன் திருக்கோயிலில் மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு. ந.வீராசாமி அவர்கள், திருவல்லிக் கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே ஆர். பெரியகருப்பன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வெடால்

வடவாமுகாக்கினீஸ்வரர் ஆலயம்!

பனையபுரம் அதியமான்

எண்ணற்ற கல்வெட்டுகள், அழகிய சிற்பங்கள் என பலவற்றிலும் தனித்தன்மையோடு திகழ்வது வெடால் திருக்கோயில்.

வெடாலின் - தொன்மைச்சிறப்பு:

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து, இந்தூர் கோட்டத்தில், விடால் நாட்டில் உள்ள விடால் எனப்படும் சோழகேரள சதுர்வேதி மங்கலம் என்பது இன்றைய வெடாலின் பழம் பெயராகும். இவ்வூர் தற்போது காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்த குக்கிராமமாகத் திகழ்கின்றது.

கல்வெட்டுக்கள்:

கி.பி.1961ல் இந்திய தொல்லியல் துறையினர் இங்கே இருந்த பத்து கல்வெட்டுக்களை படியெடுத்துள்ளனர்.. இவற்றின் வாயிலாக பல அரிய செய்திகளை அறிகிறோம். இக்கோயில் கி.பி.994-ஆம் ஆண்டிற்கு முற்பட்டது என்பதும், முதலாம் இராஜ இராஜ சோழன் (கி.பி.994), முதலாம் இராஜேந்திர சோழன் (கி.பி.1043) பரகேசரி வர்மன் (11-ஆம் நூற்றாண்டு) என பல்வேறு மன்னர்களின் ஆட்சியில் சீரோடும் சிறப்போடும் இவ்வாலயம் திகழ்ந்தது என்பதையும் வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

சித்திரை விஷு, மார்கழி திருவாதிரை உற்சவங்கள், தீபம் ஏற்ற நித்திய கட்டளை பூஜைகள் செய்ய என பல்வேறு கட்டளைகளுக்கு நில தானம் அளித்த செய்திகளைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஊர் மகாசபையால் அந்நிலங்களுக்கு வரிவிலக்கு வழங்கப்பட்ட செய்தியும் கல்வெட்டுக்களின் வாயிலாக நமக்கு தெரியவருகிறது.

வெடால் சிவாலயம்:

வெடால் கிராமத்தின் மேற்புறத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் மிகப் பெரிய ஏரிகளுள் ஒன்றான வெடால் ஏரியின் கரையோரத்தில், இவ்வாலயம் அமைந்துள்ளது. மிகப்பெரிய திருக்குளம் அருகில் காணப்படுகிறது.

எழில் நந்தி:

திருக்குளத்தையொட்டி எழிலான நந்தி, மிகப்பெரிய கல்பீடத்தின் மீது கம்பீரமாகக் காட்சி தருகிறது. பீடத்தில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அதன் நேர் எதிரே மூலவர் ஸ்ரீ வடவா முகாக்கினீஸ்வரர் சன்னதி அமைந்துள்ளது.



ஸ்ரீ வடவா முகாக்கினீஸ்வரர்:

ஸ்ரீ வடவாமுகாக்கினீஸ்வரர் சன்னதியின் நுழைவாயிலிலும், வாயிலின் கீழேயும் கல்வெட்டுக்கள் நிறைந்துள்ளன. சன்னதியில் நுழைந்ததும் விநாயகரும், முருகரும் ஒருசேரக் காட்சி தருகின்றனர். மண்டபத் தூண்களிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இதைக் கடந்ததும் மூலவர் ஸ்ரீவடவா முகாக்கினீஸ்வரர் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறார். சிதலமடைந்த கருவறையில் பிரமாண்ட வடிவில் சிவன் கம்பீரமாகக் காட்சி தருவது நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. மன்னர்கள், தனவந்தர்கள், அடியார்கள் என பலரும் தலைவணங்கி வழிபட்ட காலம் நமக்கு நினைவுக்கு வருகிறது. கருவறையின் விமானம் தூங்கானை மாடம் எனப்படும் கஜபிருஷ்ட வடிவம் கொண்டது.

விமானத்தின் கருவறைக் கோட்டங்களில் ஸ்ரீ கணபதி ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ மகாவிஷ்ணு, ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ துர்க்கை ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். கோமுகிக்கருகில் ஸ்ரீ சண்டிகேஸ்வரர் சன்னதி உள்ளது. சிவாலயத்தின் வலதுபுறம் விநாயகர் சன்னதி உள்ளது.

ஸ்ரீ வசந்த நாயகி:

நந்தியின் வலதுபுறம் அம்மன் சன்னதி அமைந்துள்ளது. அன்னையின் பெயர், ஸ்ரீ வசந்த நாயகி என்பதாகும். மூலவராக இரண்டு அம்மன்கள் காட்சி தருகின்றனர் பக்கவாட்டிலுள்ள அம்மன் இங்கு அமைந்திருப்பதற்குச் செவிவழிச் செய்தி கதை ஒன்று கூறப்படுகிறது. அந்த அம்மன் சிறிது பின்னப்பட்டதால் அதை மாற்றி புதிய அம்மன் திருவுருவத்தை நிறுவ முயற்சி செய்த போது,சோழ மன்னனின் கனவில் தோன்றிய இறைவன் உங்கள் குடும்பத்தில் பிறந்த குழந்தையை கைவிட்டு விடுவீர்களா? அதுபோல இந்த அம்மனை அங்கிருந்து அகற்றாது, புதிய அம்மனையும் நிறுவிக் கொள்ளுங்கள் என்று ஆணையிட அதன்படியே புதிய அம்மனை நிறுவியதுடன் அருகில் பழைய அம்பிகையின் திருவுருவத்தையும் நிலைப்படுத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது இப்போது இரண்டு அம்மன்களும் ஒரே கருவறையில் காட்சி தருகின்றனர்.

அன்னை வசந்த நாயகி எழிலான வடிவுடன் கருணை நிறைந்த பார்வையோடு காட்சிதருகிறாள்.

ஜேஷ்ட்டாதேவி

சிவாலயத்தின் எதிரே வலதுபுறத்தில் மிகப் பழமை வாய்ந்த அம்மன் சிலை ஒன்றும் காணப்படுகிறது. அது ஜேஷ்ட்டா தேவி என கூறுகின்றனர். இத்தெய்வத்தினை வணங்கினால் சனி தோஷம் தொடர்பான தொல்லைகள் நீங்கும் என்பது ஐதீகம்.

இச்சிலை சோழர் காலத்தில் வணங்கப்பட்டு வந்த, ஆதிதெய்வம் என்பது, வரலாற்று ஆய்வாளர்கள் கூற்று.

அமைவிடம்

இவ்வாலயம் சென்னை - புதுவை கிழக்கு கடற்கரை சாலையில் சென்னைக்கு தெற்கில் 105 கி.மீ, புதுவைக்கு வடக்கே 45 கி.மீ, தொலைவில் உள்ள கடப்பாக்கம் என்ற ஊரின் மேற்கே 5 கி.மீ, தொலைவில் வெடால் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. கடப்பாக்கத்தில் இறங்கினால் ஆட்டோ மூலம் அல்லது சொந்த வாகனத்தில் வெடால் வரலாம். சூணாம்பேட்டிலிருந்தும் (10 கி.மீ). செய்யூரிலிருந்தும் (14 கி.மீ) இவ்வூருக்குப் பேருந்து வசதி உள்ளது.

விழாக்கள்

சோம வாரம், பிரதோடம், கார்த்திகை தீபம், ஆருத்திரா, தமிழ் புத்தாண்டு, ஆங்கிலப் புத்தாண்டு, விநாயக சதுர்த்தி என பல்வேறு விழாக்களும் எளிய முறையில் நடந்து வருகின்றன. இக்கோயிலின் அருகில் அர்ச்சகரின் வீடு உள்ளதால் பக்தர்கள் எப்பொழுது சென்றாலும் ஏமாற்றமின்றி இறைவனைத் தரிசிக்கலாம்.

அபூர்வ சிற்பங்கள். அருமையான கல்வெட்டுக்கள் என பல்வேறு பெருமைகளைக் கொண்டு மாமன்னர்கள் தேடிவந்து வழிபட்ட இச்சிவாலயம், இன்று அடியார்களின் வருகைக்காகக் காத்து நிற்கின்றது. பழமையின் சின்னமாக விளங்கும் இவ்வாலயத்தைச் சீரமைத்து பழம்பெருமையை கட்டிகாப்பது. ஒவ்வொரு சிவன் அடியாரின் தலையாய கடமையாகும்.



பன்னிரு திருமுறை விழா சேக்கிழார் விழா 2008

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயிலில் 06.08.2008 முதல் 17.08.2008 முடிய பன்னிரு திருமுறை விழா மற்றும் சேக்கிழார் விழா மிக சீரிய முறையில் நடைபெற்றது. நிறைவு நாள் விழாவில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் தவத்திரு பொன்னம்பல தேசிக அடிகளார் அவர்கள், அறநிலையத்துறை முதன்மை செயலர்/ஆணையர் திருமிகு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப. அவர்கள், அறங்காவலர் குழுத்தலைவர் டாக்டர் நல்லி.என். குப்புசாமி செட்டியார் அவர்கள், முனைவர் கலைமாமணி. செந்தமிழ்வாரிதி செல்வக் கணபதி அவர்கள், அறங்காவலர்கள் மற்றும் திரளான ஆன்றோர்களும், சான்றோர்களும், அடியார் பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பயணக்கட்டுரை

ஜெர்மனியில் தேரோட்டம்

இளசை சுந்தரம் எம்.ஏ.பி.எட்., ஐ.பி.எஸ்

ஜெர்மனியில் "ஹம்" என்ற இடத்தில் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயம் உள்ளது. ஐரோப்பாவிலே உயர்ந்த ராஜகோபுரத்தோடு கூடிய ஆலயம். ஐந்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த ஆலயத்தில் அன்னை காமாட்சி வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள். சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கர குருக்கள் ஆலய ஆதீன கர்த்தாவாக இருந்து ஆகமவழியில் ஆலயப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாத முதல் வாரத்தில் பத்து நாட்கள் மஹோற்சவம் நடைபெறும். இந்த ஆண்டு ஜுன் மாதம் 5-ஆம் தேதி கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது. தினமும் மாலையில் ஆன்மிகச் சொற்பொழிவாற்ற என்னை அழைத்திருந்தார்கள். தினமும் ஒரு தெய்வத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினேன்.

பல்லாண்டுகளாக சிறு ஆலயமாக இருந்து வந்த காமாட்சி ஆலயத்தை பலவேறு இன்னல்களுக்கிடையில் புதிய ராஜகோபுரத்துடன் கூடிய மஹாதேவஸ்தானமாக அமைத்து 2002ஆம் ஆண்டில் மஹா கும்பாபிஷேகமும் நடத்தினார் பாஸ்கர குருக்கள். அடுத்த அரும்பணியாக மிகப் பிரம்மாண்டமான தேர் ஒன்றை இலங்கை சிற்பக் கலை விற்பன்னர்களைக் கொண்டு சுமார் எழுபது லட்சம் செலவில் உருவாக்கி அதன் வெள்ளோட்டத்தைக் கடந்த ஆண்டு நடத்தினார்.

இவ்வாலயத்தில் சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் என்ற ஆறு பிரிவுகளும் ஒன்று சேர்ந்தே அமைந்துள்ளன.

மூன்று வேளை பூஜைகளும், சிறப்பு வழிபாடுகளும், மங்களவாத்தியம், மந்திர



ஓசை, புராண படனம், திருமுறை ஓதுதல், நாயன்மார் குரு பூஜைகள், சத்சங்கம், சமயம் சார்ந்த கலைநிகழ்ச்சிகள் ஆகிய யாவும் தொடர்ந்து நடக்கின்றன. இந்துக்கள் மட்டுமல்லாது, ஜெர்மனியர்களும் வந்து வழிபாடு செய்கின்றனர்.

இவ்வாண்டு நடைபெற்ற மஹோற்சவம் பற்றிய குறிப்புகள்: 05.06.2008ல் கொடியேற்றம் நடைபெற்றது, காலை 7.00 மணிக்கு அபிஷேகம் 10.00



மணிக்கு மூலஸ்தானபூஜை. 17.15 கொடித்தம்பப்பூஜை 18.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை, 19.00 மணிக்கு வீதியுலா வருதல் என நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

12.06.2008 அன்று வேட்டைத் திருவிழாவும்,

14.06.2008 அன்று சப்பரத் திருவிழாவும் நடைபெற்றன

15.06.2008 தேர்த் திருவிழா காலை 7.00 மணிக்கு அபிஷேகத்துடன் தொடங்கி 10.00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, பகல் 12.00 மணிக்கு இரதம் புறப்பாடு. 15.00 மணிக்கு இருப்பிடம் வந்தடைதல், 16.30 மணிக்கு பச்சைஅலங்காரத்துடன் வசந்த மண்டபம் வந்தடைதல், 17.00 மணிக்கு உளம் குளிரும் வகையில் விசேட அபிஷேகம், 20.30 மணிக்கு விசேட பூஜை, தேரடித்திருவிழா, ஆகியவற்றுடன் 21.30 மணிக்கு பூஜையுடன் நிறைவு பெற்றது,

16.06.2008 தீர்த்தத் திருவிழா காலை 7.00 மணிக்கு மூலமூர்த்திக்கு விஷேட அபிஷேகத்துடன் தொடங்கியது. காலை 10.00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, காலை 11.00 மணிக்கு அம்பாள் தீர்த்தவாரிக்கு புறப்பாடு, தீர்த்தோற்சவம் Sieganbeck str வில் இருந்து புறப்பட்டு Saalkampsweg அருகில் உள்ள ஆற்றில் தீர்த்தோற்சவ வைபவம் நடைபெற்று 15.00 மணிக்கு சுவாமி ஆலயம் வந்தடைந்தது. இரவு கொடியிறக்கும் விழாவுடன் மகோத்சவம் இனிது நிறைவுபெற்றது.

இதற்கெல்லாம் மூலகாரணமாகவுள்ள திரு பாஸ்கர குருக்களிடம், இப்படி ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் தோன்றியது என்று கேட்டபோது அவர் , ஐரோப்பாவில் வாழும் இந்து மதச் சிறார்களும், இளைஞர்களும் ஏன் சில பெரியவர்களும் கூட நமது இந்து தர்மத்தையும் கலாச்சாரத்தையும் உணர்ந்து கொள்ளவும், வழிபடவும், அவர்கள் ஒன்றாகச் சந்தித்து மகிழ வழி செய்யவும், நமது மதத்தின் மேன்மையைப் புரிந்து கொள்ளாமல் பிற மதங்களுக்கு மாறுவதைத் தடுக்கவும் இத்தகைய ஆலய ஏற்பாடுகள் அவசியமாகிறது என்றார்.

தேரோட்டம் நடத்த அரசாங்கம் அனுமதி கொடுப்பதில் ஏதேனும்



பிரச்சனை இருந்ததா? என்று கேட்ட போது

ஆரம்பத்தில் அனுமதி அளிக்கவில்லை. டிராபிக் மற்றும் சிக்னல் பிரச்சனைகள் வரும் என்று தடுத்தார்கள். சுகாதாரப்பிரச்சனைகள் வரும் என்று சொன்னார்கள். இதற்கெல்லாம் தேவையான விளக்கங்களைக் கொடுத்து விட்டு காமாட்சி அம்பாளின் மேல் பாரத்தைப் போட்டு விட்டுத் திரும்பி விட்டேன். மறுநாள் நகரத்தலைவரிடமிருந்து போன் வந்தது.

தேரோட்டத்தின் வெள்ளோட்டத்துக்கு அனுமதி வழங்க முடிவு செய்து விட்டதாகவும் அதற்கான சிறப்பு ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும் நிகழ்ச்சியில் தானும் கலந்து கொள்ள வருவதாகவும் சொன்னார். அது எல்லாம் அம்மன் அருள் என்றார்

இந்த ஆண்டும் தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றது. ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்தும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் திரண்டனர். உள்ளூர் ஜெர்மன் மொழிப் பத்திரிக்கையிலேயே இந்த எண்ணிக்கை குறிக்கப்பட்டிருந்தது. ஜெர்மானியர்களும் தேரோட்டத்தில் கலந்து கொண்டதும் சிலர் தேர் இழுத்ததும் கண் கொள்ளாக்காட்சியாக இருந்தது. ஆலயத்தின் அருகில் உள்ள நிலப்பரப்பில் நூற்றுக்கணக்கான தற்காலிகக் கடைகள் தோன்றியிருந்தன. தமிழகத்தில் கிடைக்கக்கூடிய அத்தனை பொருட்களும் அவற்றில் குவிக்கப்பட்டிருந்தன.

தேரோட்டம் நடந்த மறுநாள் கடைகள் இருந்த பகுதியில் சிதறிக் கிடந்த குப்பைகளை ஆலய ஊழியர்கள் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆலய குருக்களும் அதில் அடக்கம். அதை விட ஆச்சர்யம் ஆதின கர்த்தர் பாஸ்கர குருக்களும் குப்பைகளைக் கூட்டிக் கொண்டிருந்தது தான். கோடிக்கணக்கான யூரோக்களுக்குச் சொந்தமான ஆலயத்தின் அறக்கட்டளைக்கு ஆதீன கர்த்தராக இருக்கும் நீங்கள் இப்படி குப்பை கூட்டலாமா? என்று கேட்டபோது, ஆதீனகர்த்தர் என்பவர் சொத்துக்களை ஆட்சி செய்யும் ஜமீன்தார் அல்ல. ஆண்டவருக்கு அவரும் ஊழியர் தான். நான்



இந்தப் பணியில் ஈடுபட்டால் தான் மற்ற குருமார்களும், ஊழியர்களும் இதில் ஈடுபடுவார்கள் என்றார். அவர் குப்பை கூட்டும் காட்சியை எனது கேமராவுக்குள் படமாக்கிக் கொண்டேன்.

ஆலய அலுவலகத்தில் லேப்டாப்போடு உறவாடிக் கொண்டிருந்த அவரிடம் உங்களின் எதிர்காலத்திட்டம் என்ன என்று கேட்ட போது நவீன வசதிகளோடு அமைந்திருக்கும் ஆலயத்தை இன்னும் விரிவுப்படுத்த வேண்டும். அருகில் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒரு சில ஏக்கர் நிலத்தை வாங்கி இசை, நடனப்பள்ளி தொடங்க வேண்டும். நூலகம் தொடங்க வேண்டும்.

15 ஆயிரம் யுரோக்களும் விலைபேசி விண்ணப்பமும் கொடுத்துள்ளேன். அனுமதி கிடைத்தால் நலமாக இருக்கும். எல்லாம் அம்பாள் செயல் என்று சொல்லிக் கொண்டிருந்த போது செல்போன் மணியடித்தது. பேசிக் கொண்டிருந்த குருக்களின் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. அந்த நிலத்தை ஆலயத்துக்காக வழங்க அரசாங்கம் அனுமதியளித்து விட்டதாம்.

எல்லாம் அம்பாள் செயல்.

சமயம் வளர்த்த பேரரசிகள்

அழ.முத்துப்பழனியப்பன்,எம்ஏ.,பில்.,
உதவி ஆணையர், கோவை.

தமிழக வரலாற்றில் இரண்டு அரசகுலப் பெண்மணிகள் சமயத்தைக் கட்டிக் காத்து பெருமைபெற்றுள்ளனர். சைவ சமயமே முற்றிலும் அழிந்துவிட்ட நிலையில் இருந்த போது, தான் ஒருத்தியாக நின்று சைவத்திற்கு உயிர் கொடுத்த பெருமை ஒரு பேரரசிக்கு உரியது. அதேபோல், கணவன் மறைந்த பின்னர், கணக்கிலடங்காத கோவில்களைக் கட்டி, எண்ண முடியாத அளவு செப்புத் திருமேனிகளைச் செய்து வைத்த பெருமை இன்னொரு மாதரசிக்கு உண்டு.

இவர்களில் ஒரு பெண் சோழ நாட்டிலே பிறந்து, பாண்டிய நாட்டுக்கு வாழ்க்கைப்பட்டவர். மற்றோர் பெண் கொங்கு நாட்டிலே பிறந்து சோழ நாட்டுக்கு மருமகளானவர். முதலாமவர் மங்கையற்கரசியார், இரண்டாமவர் செம்பியன்மாதேவியார்.

மங்கையர்க்குத் தனியரசி

சோழ நாட்டு அரசகுடும்பத்தில் மங்கையர்க்கரசி என்ற பெண் தோன்றினார். இவரைப் பாண்டிய மன்னரான நின்ற சீர் நெடுமாற பாண்டியனுக்கு மணம் முடித்து வைத்தார்கள். மங்கையர்க்கரசியார் மிகு சைவத் துறையில் தோன்றியவர். கணவனோ அண்மையில் சமணனாகி விட்டவர். அவன் மட்டுமல்ல. அவனுடைய பாண்டியநாடு முழுவதும் சமண நாடாகி விட்டது, தண்ணார் தமிழ்ப் பாண்டி நாட்டில் இருந்த கோயில்கள் எல்லாம் பாழியும், அருகர் மேவும் பள்ளிகள் பலவுமாகிவிட்டன. எங்கும், எங்ஙணும் தொடைமயிற் பீலியோடு, மூழிநீர்கையிற் பற்றி அமணர்கள் திரிந்தார்கள். அந்த சமணப் பாண்டி நாட்டிலே இரண்டே இரண்டு பேர்தான் சைவர்களாக இருந்தார்கள் என்று சேக்கிழார் சொல்கிறார். ஒருவர் அரசியான மங்கையர்க்குத் தனியாசி இன்னொருவர் அமைச்சர் குலச்சிறை, இந்த இருவரும் தாங்கள் சைவ சமயத்தில் இருப்பது அரசனுக்குத் தெரியாத வண்ணம் இருந்து ஒழுகினர்.

இந்தச் சமயத்தில் அரசி யாது செய்வதென்று தெரியாமல் மயங்கினார். தன்னுடைய பழமைச் சமயமும் நெறியும் பாழ்பட்டு போனதை எண்ணி எண்ணி மறுகினார். கொண்ட கணவனும் அந்த கோலமற்ற நெறியில் இருக்கிறார். இந்நிலையில்தான் அவர் யாரும் அறியாத வண்ணம் ஒரு செயலைச் செய்தார், கட்டிய கணவனைத் திருத்த அவருக்கு இதைத் தவிர வேறு செயல் தோன்றவில்லை. அமைச்சர் குலச்சிறையாரை அழைத்தார். பாண்டிய நாட்டில் சைவம் தழைக்க வேண்டுமானால் அதற்கு ஒரே வழி இதுதான். வேத நெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி வருகின்ற திருஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்து வரஏற்பாடு செய்யுங்கள்

என்று தெரிவித்தார். அவர்கள், ஆளுடைய பிள்ளையான, சம்பந்தரை அழைத்து வர ஆள் அனுப்புவதை மன்னவனும், மற்றையோரும் அறியாத வண்ணம் செய்தனர். ஞானசம்பந்தர் அது சமயம் திருமறைக் காட்டில், அப்பரோடு தங்கியிருந்தார். மதுரையிலிருந்து தூதன் வந்ததுமே ஞானசம்பந்தர் புறப்பட்டார்.

அன்றைய நாள் நன்றாக இல்லை என்று அன்பர்கள் கூறியபோது, வேயுறு தோளிபங்கன் அருளினால் அடியார்களுக்கு எல்லா நாளும் நல்ல நாளே என்று தெரிவித்து பயணத்தை தொடங்கினார், பல தலங்களை வழிபட்டு மதுரை வந்தார் சமணர்கள் அவர் மடத்திற்கு தீயிட்டனர், இந்த நிகழ்ச்சியின் பயன், பையவே என்று பாண்டியர்க்காகட்டும் என்று சம்பந்தர் பாடினார். அதனால் பாண்டியனுக்கு வெப்பு நோய் வந்ததும், சமணர்களால் அது தீர்க்கமுடியாமற் போனதும். சம்பந்தர் திருநீற்றின் பெருமையைக் கூறி, நீறு தடவியதும், வெப்பு நோய் தீர்ந்ததும் அதன் பின்னர் அனல் வாதிலும், புனல் வாதிலும் சமணர்களை வென்று, சைவத்தை நெறிப்படுத்தியதும் பெரிய வரலாறு, ஆனால் இத்தனைக்கும் காரணமாக பின்னனியில் இருந்து செயலாற்றியவர் மங்கையர்க்கரசியார். அதனால் ஒரு முழுப் பதிகத்தில் ஞானசம்பந்தர், மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை, சிவன் திருநீற்றினை வளர்க்கும் பந்தணை விரலாள் பாண்டி மாதேவி என்றும் மணி முடிச்சோழன் தன் மகளாம், பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி பாங்கினாற் பணிசெய்து சைவம் வளர்த்தாள் என்றும் பலபடப் பாராட்டுகிறார்.

''சேக்கிழார் பிரான் பெரியபுராணத்தில், அவரை

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளி னாலே
இருந்தமிழ்நாடுற்றஇடர்நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்றலாமே''

என்று போற்றுகின்றார்.

இது நடந்த வரலாற்று கற்பனை அல்ல, கி.பி. 625-630 ல் மங்கையர்க்கரசி இந்த அற்புதத்தைப் பாண்டி நாட்டில் நிகழ்வித்து சைவ சமயத்தை உய்வித்தார்.

செம்பியன் மாதேவியார்

இவர் கொங்கு நாட்டில் உள்ள கொல்லிமலையை ஆண்ட மழவரையரின் மகளாகப் பிறந்தார், சோழநாட்டு அரசரான கண்டராதித்தரின் மனைவியானார், மிக இளம்வயதிலேயே கண்டராதித்தர் மாண்டார் இவருடைய ஒரே புதல்வர் மதுராந்தகர் உத்தம சோழர்.

கணவன் மறைவுக்குப்பின் கோயில்களை கட்டுவதும், கோயில்களுக்குத் தானம் வழங்குவதுமே தன் கடமையாகக் கொண்டு வாழ்ந்தார். செம்பியன் மாதேவி தம்முடைய கணவரான கண்டராதித்தர். அவருடைய சகோதரரான அரிஞ்சயன், அவர் புதல்வரான சுந்தர சோழர், பின் அவர் குமாரன் உத்தம சோழர், பின் பேரரசன் இராசராசன், அதன் பின் அவன் குமாரன் இராசேந்திரன், இப்படி ஆறு அரச தலைமுறையைக் கண்டவர் இவர் ஒருவரேதாம் எனலாம், செம்பியன் மாதேவி ஆளுமையிலும், நிர்வாகப் பண்பிலும் சிறந்த இராசராசனை உருவாக்கியவர் இவர், இவர் நினைவாக இராசராசன் தன் மகளுக்கு இவர் பெயரை வைத்தான், திருமுக்கூடல் என்ற ஊரில் இவர் நினைவாக ஒரு மண்டபம் கட்டினான். அனைத்துச் சோழ மன்னர்களும், இவர் மேல் பெருமதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தனர். கல்வெட்டுக்கள் இவரை ''மேற்கெழுந்தருளிய தேவர் கண்டராதித்த'' தேவர் தேவியார், மழப் பெருமானடிகள் மகளார் பராந்தகன். மாதேவரடிகளான ''செம்பியன் மாதேவியார்'' என்று கூறும் உத்தம சோழரைத் திருவயிறு வாய்ந்தவர் என்றும் அழைக்கப்படுகிறார்.

பல கோவில்களைப் புதிதாகக் கட்டினார். பல கோவில்களைக் கற்கோவிலாக்கினார். மேலும், சிலவற்றை விரிவு படுத்திக் கட்டினார். அவர் கட்டிய கோவில்களில் இன்றும் நிலைத்து அவர் புகழ் பாடுபவை பலவாம், கோனேரிராஜபுரம், ஆடுதுறை திருக்கோடிக்காவல், குத்தாலம், அனங்கூர், திருவாரூர், திரு அறநெறிக் கோவில், விருத்தாசலம், திருவக்கரை, மயிலாடுதுறை வடதிருமுல்லை வாசல் முதலான கோவில்கள் அவரால் திருப்பணி செய்யப் பெற்றுத் துலங்கின.அது மட்டுமல்ல பல செப்புத் திருமேனிகளை அவர் உருவாக்கினார். இன்று அவை நம்

கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கின்றன.

இவருடைய கோவிற்கலையும், சிற்பக்கலையும், செம்பியன் மாதேவி பாணி என்கின்றன. இவர் கோயிற் கலையில் புதிய முறையையே உருவாக்கினார். இவர் பெயரால் செம்பியன் மாதேவி என்கிற ஊர் இன்றும் தஞ்சைமாவட்டத்தில் நின்று விளங்குவது இவர் பெருமைக்குச் சான்றாகும்.

மேலும் பல கோவில்களுக்கு அவர் கணக்கற்ற ஆபரணங்களையும், தங்கத்தையும் தானமாக வழங்கினார்.

இங்ஙனம் பெருமை பொருந்திய ஒரு பெரு மூதாட்டியாக மாதேவியார் தமிழக வரலாற்றில் புகழ் பெறுகிறார்.

இராசராசன் தமக்கை குந்தவையும் புகழ் பெற்றவரே! ஆனால் அவர் சோழர் மகளாகப் பிறந்து, சோழ நாட்டிலேயே வாழ்ந்தவர். அவருடைய கணவர் வந்தியத்தேவன் வீட்டோடு மாப்பிள்ளையாகத்தான் இருந்திருக்கிறார்.

ஆனால் மங்கையர்க்கரசியும், செம்பியன் மாதேவியும் பிறந்த இடத்தை விட, புகுந்த இடத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள். அதன் மூலம் வரலாற்றில் சிறந்து நிற்பவர்கள், எங்ஙனம் மலையிற் பிறக்கும் சந்தனம், மலையிற்சிறவாது, மற்றவர்க்குப் பயன்படுகிறதோ, அது போலவும், யாழிற் பிறக்கும் இசையாழுக்குப் பயன்படாது ஏனையோரை மகிழ்விக்கிறதோ அதுபோல, பெண் பிறந்த இடத்தை விட, புகுந்த இடத்திற்கே பெருமை தருவாள். இந்த உண்மையை இந்த இரண்டு பேரும் தங்களுடைய வாழ்வில் நிரூபித்தார்கள்.

சைவமும், தமிழும் வாழ்கின்ற வரையிலும் இவர்களும் வாழ்வார்கள்.

சென்னை மாநகரின் ஆதி தெய்வங்கள் ஆதி துளிர்கா வனத்தம்மன்

மரஞ்செடிகொடிகள் துளிர்விடும்போது அவற்றைக் காத்து வளம் பெறச் செய்யும் தேவி துளிர்காவனத்தம்மன் என்று அழைக்கப்படுகிறாள். சென்னை நகரம் முன்காலத்தில் எண்ணற்ற சோலைகளின் இருப்பிடமாக இருந்தது. திருஞான சம்பந்தர் கானமர் சோலை கபாலீச்சரம் என்றும் சுந்தரர், 'முருகமா சோலைசூழ் திருமுல்லை வாயிலாய்' என்றும் சோலைகளைச் சார்ந்த கோயில்களாகக் குறிப்பது காண்க. சோலைகள் துளிர்விட்டுச் செழிக்கும்போதுஅவற்றினைக் கண்டு மகிழ்ந்து அதில் உறையும்அன்னை தெய்வத்தை மக்கள் துளிர்காவனத்தம்மன் என்று கொண்டாடினர். சென்னையில் பல இடங்களில் துளிர்காவனத்தம்மன் ஆலயங்கள் உள்ளன. கோடையில் இலைகளை உதிர்த்தபின் செடிகொடிகள் தொடர்ந்து வரும் வசந்த காலத்தில் புதியதாகத் துளிர் எடுக்கும் மாதங்கள் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களாகும், இந்த மாதங்களில் மக்கள் இவளுக்குப் பொங்கலிட்டுப் பூச்சொரிந்து வழிபட்டனர். இந்நாளில் இவளை துலுக்கானத்தம்மன் என்று அழைக்கின்றனர். மக்கள் துலுக்கான்ம் என்று பெயர் சூட்டிக் கொள்ளும் வழக்கம் இருந்தது.

சென்னை ஏழுகிணறு பகுதியிலுள்ள துளிர்காவனத்தம்மன் ஆலயம் புகழ்பெற்ற ஆலயமாகும். அருட்பிரகாசவள்ளலார் ஆதிநாளில் இந்த துலுக்கானத்தம்மன் மீது ஒரு பாடல் பாடியுள்ளார்.

உலகம் உய்ய உதித்த உடையவர்

சென்ற இதழ் தொடர்ச்சி...

பெ.ராமநாதபிள்ளை

பெரியநம்பி என்ற தம்முடைய ஆச்சாரியருடன் ஸ்ரீராமானுஜர் மகிழ்வோடு காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வருகையில் பெரியநம்பியுடைய மனைவி விஜயாம்பாளும், ஸ்ரீராமானுஜர் மனைவி ரட்ஷகாம்பாளும் ஒரு கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக குடங்களை கிணற்றிலே இறக்கி தண்ணீர் முகந்த பொழுது ஒருகுடம் இன்னொரு குடத்துடன் மோதிப் பிரிந்து செல்லவும் ஸ்ரீராமானுஜர் மனைவி ரட்ஷகாம்பாள் மிகுந்த கோபம் கொண்டு கயிற்றில் கட்டிய தன்னுடைய குடத்தை மேலே எடுத்து விஜயாம்பாளை திட்டி வேறு ஒரு குடத்தை கொண்டு தண்ணீர் முகந்து சென்றாள். ஒரு குடம் இன்னொரு குடத்தோடு உரசியதால் தீட்டு பட்டதாக கோபம் கொண்டு தன் குலத்தின் பெருமைகள் எல்லாம் பேசி விஜயாம்பாளை இழிவாக நடத்தினாள் ரட்ஷகாம்பிகை.

பெரியநம்பியின் மனைவியார் விஜயாம்பாள் ஒரு வார்த்தையும் சொல்லாமல் கிணற்று நீரால் குடத்தை நிறைத்துக் கொண்டு மிகுந்த வூருத்தத்துடன் கவலையுடன் தன் கணவராகிய பெரியநம்பியிடம் சொல்லி வருத்தப்பட்டார். இச்செய்தியைக் கேட்டு பெரியநம்பியும் கவலைகொண்டு இப்படியும் உமது மனைவி செய்தார் என்று ஸ்ரீராமானுஜரிடம் சொன்னால், உடனே ராமனுஜர் மிகவும் கோபம் கொண்டு தன் மனைவியைப் பிரிந்து விடுவார் என்று மனதிலே அடக்கி வைத்துக் கொண்டு ராமானுஜரிடம் சொல்லாமலே தன்மனைவி விஜயாம்பாளுடன் காஞ்சிபுரத்தை விட்டு நீங்கி ஸ்ரீரங்கம் சென்றார்.

நடந்த நிகழ்வுகள் எதுவும் தெரியாத ராமானுஜர் வீட்டிற்கு வந்ததும் தமது ஆச்சாரியார் பெரியநம்பி எங்கே என்று கேட்கவும் பக்கத்து வீட்டார்கள் பெரியநம்பி ஸ்ரீரங்கம் சென்று விட்டார், எனக் கூறினார்கள். பெரியநம்பி சொல்லாமல் போனதற்கு என்ன காரணம் என்று வினாவவும் அருகிலிருந்தவர்கள் ராமானுஜரின் துணைவியார் செய்த செயல்களை எல்லாம் எடுத்து கூறினார்கள். மிகுந்த கோபமடைந்த ராமானுஜர் தன் மனைவியை நோக்கி முன்பு திருக்கச்சி நம்பி அமுது செய்த மிச்சத்தை உண்டால் புனிதம் என நினைத்து அவரை வீட்டிற்கு விருந்துண்ண அழைத்தேன். ஆனால் நீ அவரை வெளித்திண்ணையிலேயே உட்கார வைத்து சாப்பாடு அளித்து அவர் சாப்பிட்ட பின்பு சாணநீரால் அந்த இடத்தை சுத்தம் செய்து குளத்திலே குளித்துவிட்டு வீட்டிற்கு வந்தாய். அந்த பாகவத அபசாரத்தைப் பொறுத்தேன்.

''வானவர் இடுக்கண் தீர்த்தான் மனைபுக எதிரே சென்ற

தேனவர் குழலை நோக்கித் திருக்கச்சி நம்பி முன்னம்

போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதம் என்றே

நானவன் பின்சென் றேத்த நவையுறும் அபசாரந்தான்''.

ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 171

இப்பொழுது என் உயிரினும் மேலான பெரியநம்பியின் திருஉள்ளம் பெரிதும் வருந்தக்கூடிய அளவிற்கு மன்னிக்க முடியாத பாகவத அபசாரத்தை செய்து இருக்கிறாய். மேலும் நீயே என்னை கொலை செய்த பாவத்திற்கு ஒப்பான பாவத்தை

செய்திருக்கிறாய் என்று மிகவும் மனம் நொந்து பேசினார்.

''அன்று நீஒன்று பண்ண அப்பிழை பொறுத்தேன் அந்தோ

இன்று மென் ஆவி நாதன் எனவரு பெரிய நம்பி

தன்திரு உளத்தில் கன்றத் தரணி யோர்காண என்னைக்

கொன்றதில் கொடிய பாவம் பண்ணினாய் கூற்றம் அன்னாய்''

ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 172

மேலும் ஒரு சமயம் ஒரு வைஷ்ணவர் மிகுந்த களைப்புடனும், பசியுடனும் நம் வீட்டிற்கு வந்து உணவு கேட்டபொழுது வீட்டிலே உணவு வைத்துக்கொண்டே உணவு இல்லை என்று சொல்லி அனுப்பி வைத்தாய். அந்தப் பாவத்தையும் பொறுத்தேன், எனவே இன்றோடு உனக்கும் எனக்கும் ஏற்பட்ட பந்தங்கள் எல்லாம் தீர்ந்து விட்டன. என்னை நான்துறந்தேன், சன்னியாசத்தை இப்பூமியில் இன்றே ஏற்றுக் கொள்ளப்போகிறேன் என்று சொல்லவும், அதனை கேட்ட ராமானுஜர் மனைவியானவள் மிகவும் நடுநடுங்கி வருந்தி அழவும், உத்தமரான ராமானுஜர் மனைவியை மன்னித்து கோபத்தை விட்டார்.

''உத்தம வேட மாகி ஓங்குசீர்ச் சந்தி யாதம்

இத்தலம் தன்னில் இன்றே கைக்கொள்வேன் என்ன எண்ணி

முத்தரும் மறைகள் ஓர்ந்த முனிவரும் புகழ்ந்து போற்றும்

நித்தரில் ஒருவ னாகி நீள்நிலத்(து) உதித்தான் அன்றே''

ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 174

சில நாட்கள் கழிந்தன. ஸ்ரீராமானுஜருக்கு இல்லத்தினை துறந்து துறவு கொள்ளும் நல்ல நேரத்தை எம்பெருமாள் நிர்ணயித்து விட்டான்.

ஒரு நாள் ஸ்ரீராமானுஜர் பெருமாள் சன்னதியில் சுவாமியை வழிபட்டுக் கொண்டிருந்த பொழுது ஓர் அந்தணர் ராமானுஜரை அணுகி எனக்கு பசி தாகம் உள்ளது அய்யனே நீங்கள் அதை தீர்த்து வைக்க வேண்டும் என்று வேண்டினார். அப்பொழுது ராமானுஜர் அந்த அந்தணரிடம் என் இல்லம் சென்று அடியேன் கூறியதாகச் சொல்லி என் மனைவியிடம் இருந்து அமுதினைப் பெற்று பசிதாகம் தீர்த்துக் கொள்ளும் என்று சொன்னார். அந்த அந்தணரும் ராமானுஜர் இல்லம் சென்று ராமானுஜர் மனைவியாரிடம் உணவு கேட்டார். வழக்கம் போல் அந்த அம்மையார் உணவும் இல்லை உணவு தயாரிக்கப் பொருளும் இல்லை என்று திட்டி அனுப்பிவிட்டார். மீண்டும் அந்த அந்தணர் ராமானுஜரிடம் வந்து நடந்ததை விவரித்து சொன்னார். ஸ்ரீராமானுஜர் தன்மனைவியின் குணத்தை கண்டறிய அந்த வாய்ப்பைக் கடைசி வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார். அந்த அந்தணரிடம் ரட்ஷகாம்பாள் தகப்பனார் எழுதியது போல ஒரு ஓலையை எழுதி அதில் ரட்ஷகாம்பாள் தம்பியின் திருமணம் நிச்சயமாகியுள்ளது எனவும், உடனே புறப்பட்டு வரவும் என்று எழுதி புடவை, வேஷ்டி, பழங்கள் தாம்பழத்திலே வைத்து இவற்றை அந்த அம்மையாரிடம் கொடும் என்று சொல்லி அந்த அந்தணரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அந்த அந்தணரும் ஸ்ரீராமானுஜரின் மனைவியிடம் மேற்படி தாம்பூலத்தையும், பழத்தையும் கொடுத்தார். அந்த அம்மையாரும் அதை தாய்வீட்டு சீதனம் என்று நினைத்து மகிழ்ந்து அறுசுவை உணவு சமைத்து அந்த அந்தணருக்கு அளித்தார். எனவே உணவு பொருட்களை வீட்டில் வைத்துக்கொண்டே இல்லை என்று ரட்ஷகாம்பாள் பொய் சொன்னது நிருபிக்கப்பட்டுவிட்டது.

ராமானுஜர் தம் இல்லம் வந்து தன் மனைவியிடம் உன் உடைமைகள் அனைத்தும் எடுத்துக் கொண்டு உன் தம்பியின் திருமணத்திற்குச் சென்று மகிழ்ச்சியுடன் இருப்பாயாக நான் பின்பு வருகிறேன் என்று சொல்லவும் அந்த அம்மையாரும் ராமானுஜரிடம் விடை பெற்றுக் கொண்டு தன் வீட்டு வேலைக்காரர்களுடன் தன் பிறந்த வீடு போய் சேர்ந்தார். அதன் பிறகு அந்த அம்மையார் பற்றிய செய்தி ஒன்றும் காணப்படவில்லை.

மகான் ஸ்ரீராமானுஜர் தன் மனைவியை துறந்தார். தன்வீடு, இருப்பிடம், பொருட்கள் எல்லாவற்றையும் துறந்தார். அவர் உள்ளம் தற்பொழுது பஞ்சுபோல் சுமையற்று இருந்தது. பெருமாளிடமே தன் நெஞ்சினை வைத்தார். இல்லறம் எனும் கூண்டு கதவுகள் திறந்தன, விடுதலை பெற்றார் பெருமாளின் சங்கல்பம் இதுவே என்று எண்ணினார்.

தன் சீடர்களைக் கொண்டு காசாயவஸ்திரம் (காவியுடை) குண்டிகை (கமண்டலம்) திரிதண்டம் ஆகியவற்றை கொண்டு வரச்சொன்னார். சீடர்கள் அவற்றைகொண்டு வந்ததும். தெளிந்த மனதுடன் ஸ்ரீவரதராஜனை வணங்கி எம்பெருமானின் அனுமதி பெற்று ஆளவந்தானின் திருவடிகளை வணங்கி சன்னியாசம் ஏற்றுக் கொண்டார். அந்த நிமிடமே கலிபுருஷன் கதிகலங்கினான் ராமானுஜர் காசாயவஸ்திரம் உடுத்தி திரிதண்டம், கமண்டலங்களை ஏந்தி பன்னிருதிருமண்காப்பு அலங்கரிக்கப்பட்டு மகாதேஜஸ்சுடன் விளங்கினார் ராமானுஜர். அப்போது ஸ்ரீவரதராஜப் பெருமாள் திருகச்சி நம்பி மூலமாய் பிரசாதங்களையும், மரியாதைகளையும் அனுப்பி வாழ்த்தினார். ராமானுஜரும் சன்னியாசஆஸ்ர சுவீகார முறைகள் அனைத்தும் செய்து ஸ்ரீகாஞ்சிவரதராஜப் பெருமானை வேதபாராயண கோஷ்டியுடன் சென்று சேவித்தார். வரதராஜப் பெருமாள் மிகவும் மனமகிழ்ந்து ஸ்ரீராமானுஜருக்கு யதிராஜர் என்று பெயரிட்டார். சன்னியாசிகளுக்கு எல்லாம் அரசன் எம் ராமானுஜர் என்பது அதன் பொருள். அன்றிலிருந்து ராமானுஜனை எதிராஜர் என்று அழைத்தார்கள்.

ஸ்ரீராமானுஜர் தன் மனைவியை அவர்தம் தாயார் தந்தையார் வீட்டிற்கு நியாயமான முறையிலேயே பிறந்த தாய்வீட்டிற்கு அனுப்பி வைத்தார் என்பது பிரபந்தா அமிர்தம் என்னும் நூல் தரும் செய்தியாகும். ரட்ஷகாம்பாள் முதல் தடவையிலேயே அந்த அந்தணருக்கு உணவு அளித்திருந்தால், ராமானுஜர் இல்லறத்தைத் துறக்கத் துணிந்து இருக்கமாட்டார் அல்லது திருமண ஓலையுடன் புடவை, வேட்டி, பழங்கள் கொண்டு வந்த அந்தணருக்கு உணவு படைக்காமல் இருந்திருந்தால் உண்மையிலேயே வீட்டில் உணவு படைக்க பொருள் இல்லை என்று உறுதி செய்து கொள்ளலாம். ரட்சகாம்பாளின் உண்மையான தன்மை என்ன என்று அறிவதற்காகத்தான் தன் மாமனார் எழுதியது போல ஓலை எழுதி அனுப்பினார். இது மன்னர் மாறு வேடம் இட்டு மக்களை அறிவது போன்றது.

ராமானுஜர் சன்னியாசம் ஏற்பதற்கு தன் மனைவி ஆச்சார்யராக அனுமானித்த திருக்கச்சி நம்பிகளுக்கு செய்த அவமரியாதைகளும், தன் ஆச்சாரியாரின் மனைவிக்கு செய்த அவமரியாதைகளும் இரண்டும் ஸ்ரீராமானுஜர் சன்னியாசம் ஏற்பதற்கு போதுமான காரணமாக இருந்தாலும் முடிவை உடனே எடுக்காமல் தன் மனைவி மனமகிழ்ச்சியுடன் வீட்டிற்கு செல்லட்டும் என்ற நல்லெண்ணத்திலேயே மேற்படி தன் மாமனார் எழுதியதாக ஓலை எழுதி அனுப்பினார். தன் ஆத்மாவை காப்பதற்காக இவ்வாறு செய்தார்.

வியாசபகவான் சொல்லும் பொழுது ஒருவன் தன் செல்வத்தை எவ்வளவு கொடிய துன்பத்திலும் காப்பாற்ற வேண்டும். அப்படி காப்பாற்றிய செல்வத்தை இழந்தாலும் மனைவியை காப்பாற்ற வேண்டும். அந்த மனைவியை இழந்தாகிலும் ஆத்மாவை காப்பாற்ற வேண்டும் என்றார். அந்த அறிவுரையின்படி தன் ஆத்மாவை காப்பாற்றுவதற்காகவே இராமானுஜர் தன்மனைவியை இழந்து சன்னியாசம் ஏற்றுக்கொண்டார்.

திருக்கோயில்
திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ 10/
ஓராண்டுச்சந்தா	ரூ 120/
ஐந்து ஆண்டுச் சந்தா	ரூ. 500/
பத்து ஆண்டுச்சந்தா	ரூ 1000/
ஆயுட்காலச்சந்தா	ரூ 1500/

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ 15,000/
2. முன்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 10.000/
3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 7,500/
4. உள்புறம் முழுப்பக்கம்	ரூ 5,000/
5. உள்புறம் அரைப்பக்கம்	ரூ 3,000/

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

வளரும் திருப்பணிகள்

அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயில்

கீழைப்பழையாறை

கோயில் இருப்பிடம்

கோயில் நகராம் கும்பகோணத்திற்குத் தெற்கே ஐந்து கி.மீ தொலைவில் அமைந்துள்ளது கீழைப்பழையாறை அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயில். மக்கள் வழக்கில் மங்கையர்க்கரசி கோயில் என்றழைக்கப்படுகிறது. இத்தலத்தில் மங்கையர்க்கரசியாருக்கு சிறப்பாக குருபூசைவிழா நடைபெறுகிறது. அக்காரணம் பற்றியும், அந்த அரசி பிறந்த ஊரில் இருப்பதாலும் இப்பெயர் பெற்றது. இத்திருக்கோயிலைப்பற்றி தெரிந்து கொள்ள காலம்கிழித்தெறிந்த தாள்களைச் சேகரித்துப் பார்க்க வேண்டியுள்ளது. பிற்கால சோழ சாம்ராஜ்யத்தின் முதல் நகராக மூத்த நகராகப் பழையாறை மாநகர்சிறந்து விளங்கியது.

கி.பி ஏழாம் நூற்றாண்டு அளவில் விஜயாலயச் சோழன் காலத்தில் சுமார் 5கி.மீ சுற்றளவு உடைய நகராக இது இருந்திருக்கின்றது. பழையாறை என்றும் முடிகொண்டசோழபுரம் என்றும்அழைக்கப்பட்ட இந்நகரில் சோழ மாமன்னர்களின் குழந்தைப் பருவமும் வயோதிக காலமும் கழிந்தன. சோழ மன்னர்களின் முடிசூடும் நகரங்களில் முதன்மை நகராக விளங்கிய இந்நகர் பாண்டியர் படையெடுப்புக்குப்பின் பல்வேறு கிராமங்களாகப் பிரிந்திருக்கின்றது. அவை உடையாளூர், நாதன்கோயில், கொருக்கை, கீழைப்பழையாறை, மேலப்பழையாறை, கோபிநாதபெருமாள்கோயில், சுந்தர பெருமாள்கோயில், திருவலஞ்சுழி இராசேந்திரன்பேட்டை என்பனவாகும். இதன்கண் ஏறத்தாழ 20 திருக்கோயில்கள் இருந்திருக்கின்றன.

கீழைப்பழையாறையில் அமைந்துள்ள அற்புதத் திருத்தலம் அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயில். இது தேவார வைப்புத்தலம். இறைவன்சோமேஸ்வரர், அம்பாள் சோம கமலாம்பிகை, தீர்த்தம் சோமதீர்த்தம், ஸ்தல விருட்சம் நெல்லி.

தலபுராணம்

தட்சனுடைய சாபத்தால் சந்திரனுக்கு உடல் அழுகும் நோய் ஏற்பட்டது. இதனைப் போக்க இத்திருக்கோயில் திருக்குளத்தில் நீராடி இறைவனை வழிபட்டு வந்தார். ஈசன் திருவருளால் தன்னுடைய இழந்த கலைகள் யாவும் மீண்டும் வளரும் தன்மை பெற்றார். ஈசனிடம் தனக்கு ஏற்பட்டதுபோல் நோயுடையார் இத்திருக்கோயிலுக்கு வந்து வழிபட நோய்நீங்கப்பெற வேண்டும் என்றும் பிரார்த்தித்தார். மேலும் நல்நிலையிலிருந்து வறுமையுற்றோர் இத்தல இறைவனிடம் வந்து வழிபட மீண்டும் இழந்த செல்வங்களைப் பெற வேண்டும் எனவும் வேண்டினார். சந்திரனுக்கு சோமன் என்று ஒரு பெயர் உண்டு. சோமன் வழிபட்டு அழியாப் பெருவாழ்வுபெற்றதால் இறைவன் சோமநாதர்என்று அழைக்கப்படுகிறார்.

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன். பரம் பொருளைத் தாங்குகின்ற பெருமை தனக்கே உரியது என கைலாய மலை செருக்குற்று இருந்தது. அதுபோலவே தன் தோள் வலிமையால் இராவணனும் செருக்குற்று இருந்தான். இந்நிலையில் பார்வதி தேவியார் இறைவனிடத்தில் ஊடல் கொண்டிருந்தார். பார்வதியாரின் ஊடலைத் தீர்க்கவும் இவ்விருவரின் ஆணவத்தை நீக்குவதற்கும் இறைவன் திருவுள்ளம் கொண்டார்.



இராவணன் கைலாய மலையை எடுக்க கைலாயம் அசைந்தது. பார்வதியார்

அஞ்சி இறைவனைத் தாவி அணைத்தபோது தேவியாரின் ஊடல் நீங்கியது. பார்வதியாருக்காக சுவாமி கட்டை விரலை ஊன்றி கைலாய மலையை அழுத்த கைலாயத்தின் ஆணவம் அங்கே அகன்றது. இராவணனின் தோள்கள்நெறிய இராவணனின் ஆணவமும் அகன்றது. தன்னுடைய ஆணவம் போக கைலாய மலையும் இராவணனும் பூஜித்த தலம் இதுவாகும். கருடனும் ஆதிசேஷனும் வழிபட்டதலம்.

வரலாறு

மங்கையர்குல திலகம். சைவசமயத்தின் விடிவெள்ளி. சைவத்தின் ஆணிவேர் என்றெல்லாம் போற்றப்படும் மங்கையர்க்கு அரசி மணிமுடிச்சோழன் மகளாக இவ்வூரில் பிறந்தார். இவர் கூன்பாண்டியனின் மனைவியரானார். சமணப்படுகுழியில் பாண்டிய மன்னன் வீழ்ந்து கிடக்க பாண்டிய நாட்டின் சமயமாக சமணம் திகழ்ந்தது. ஞானசம்பந்தப் பெருமான் இறைவனுடைய திருவருளால் ஞானப்பால் உண்டு, தலங்கள் தோறும் சென்று திருமுறைகளைப்பாடி, வருகின்ற தன்மையால் மீண்டும் சைவத் திருக்கோயில்கள் மறுமலர்ச்சி உற்று புதுப்பொலிவு பெற்றுத் திகழ்வதையும் மங்கையர்க்கரசியார் அறிந்தார்.

தங்கள் அமைச்சர் குலச்சிறையார் மூலமாக ஞானசம்பந்தரை பாண்டிய நாட்டிற்கு அழைத்தார். பாண்டி மன்னனின் வெப்புநோய் ஞானசம்பந்தரால் நீக்கப் பெற்றது. அவர் அருளால் பாண்டி மன்னனின் கூன்முதுகு நிமிரப் பெற்று நின்ற சீர் நெடுமாறன் எனும் பெயர் பெற்றார். அங்கே சைவமும் நிமிர்ந்து நின்றது. இம்மாதரசியை, ஞானசம்பந்த பெருமான் மங்கையர்க்கு அரசி வளவர்கோன்பாவை, வரிவளைகைமடமானி எனப்போற்றுகிறார். வருடந்தோறும் சித்திரை மாதம் ரோகிணி நட்சத்திரத்தன்று மங்கையர்கரசியார் குருபூஜை இங்கே நடைபெறுகின்றது.

சைவம் தழைப்பதற்கு வேராக அமைந்த மங்கையர்கரசியார் பிறந்த இப்பழையாறை மாநகரில் பெரியதொரு சிவாலயம் எடுக்க வேண்டும் என்று மூன்றாம் குலோத்துங்க சோழன் விரும்பினான். கோயிலை கற்றளியாக்கி விரிவு செய்தான். மிகப் பெரிய இராஜகோபுரம் அமைக்க விரும்பினான். அதன்பிறகு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் அத்திருப்பணி நிறைவு பெறாமல் நின்று போனது.

கோயில் அமைப்பு

கிழக்கு பார்த்த இராஜகோபுரம். சுமார் 30 அடி உயரத்திற்கு கருங்கல் கட்டுமானம். செங்கல் கட்டுமானத்துடன் உள்ளது. பிரம்மாண்டமான நுழைவு வாயில். இந்த கோபுர வாயிலின் இருபுறத்திலும் நாட்டிய கரணச்சிற்பங்கள் அழகாக காட்சியளிக்கின்றன. நாட்டிய மாதர்கள் விதவிதமாகக் காட்சியளிக்கின்றனர். இதில் பல உருவங்கள் சிதைவடைந்து உள்ளன. அதனை அடுத்து 8 அடி உயர பலிபீடம், நந்திதேவர், பிரதோஷ நந்திதேவர் ஆகியோர் தனிக் கருங்கல் மண்டபத்தில் காட்சியளிக்கிறார். இதைத் தாண்டி மூன்று நிலையுடன் கூடிய ஒரு கோபுரம், பெரிய பிரகாரம் நேரே காட்சி தருவது அருள்மிகு சோமநாதர்சன்னதி.

இத்திருக்கோயில் மாடக்கோயில் அமைப்பு உடையது. இடப்பக்கம் சென்று 10 படிகள் ஏறி இறைவனை தரிசிக்க வேண்டும். படிகள் ஏறுமிடம் ஒரு தேர்போல் செதுக்கப்பட்டுள்ளது. குதிரை. யானைகள் இணைந்து தேரை இழுப்பது போல் கலையழகுடன் காட்சியளிக்கின்றன. அழகொழுகும் பிரகார சுவர்கள். கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி தரிசனம் இவரை தரிசிக்க படிகள் ஏறிச் செல்ல வேண்டும். இதனருகே நரசிம்ம உருவத்துடன் கூடிய சிற்பங்கள் அழகாகக் காட்சியளிக்கின்றன. மேலும் கோஷ்டத்தில் அர்த்த நாரீஸ்வரர், பிரம்மா, விஷ்ணு ஆகியோர் உள்ளனர். சண்டிகேஸ்வரர் சன்னதி உள்ளது.

வலம் முடித்து யானை மற்றும் குதிரைகள் இழுக்கும் தேர்வடிவ மண்டபத்தின் மேல் ஏறினால் விஸ்தாரமான 12கால் மண்டபம், சற்று நடந்தால் 16 கால் மண்டபம் உள்ளது. இங்கே இடப்பக்கமாக 3 விநாயகர்கள் வரிசையாக அமர்ந்திருக்கின்றனர். வலப்பக்கம் வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணியர் காட்சியளிக்கிறார்.

இதை அடுத்து பிரசித்தி பெற்ற கைலாசநாதர் சன்னதி உள்ளது. இராவணன் தாங்கி நிற்கும் கைலாய மலையில் ஒருகாலைத் தொங்க விட்டுக் கொண்டும் மறு காலை மடித்த நிலையிலும் மேல் கரங்களில் மான் மழு ஏந்தியவராக சிவபெருமான் காட்சியளிக்கிறார். அவருடன் ஊடல் கொண்டு ஒதுங்கியிருந்த உமையம்மை கயிலை மலையின் நடுக்கமுணர்ந்து அஞ்சி நடுநடுங்கி பெருமானை கட்டித்தழுவும் கோலத்தில்



இருக்கிறார். கீழ் இடக்கரத்தால் உமையம்மையை அணைத்து ஆறுதல் சொல்லும் பரமேஸ்வரன் மலையை பெயர்த்தெடுக்க முயலும் இராவணனை தேவிக்குச் சுட்டிக்காட்டும் வண்ணம், கீழ் வலக்கரத்தின் ஒருவிரலை கீழ் நோக்கி காட்டுகிறார். அதோடு தன் வலக்கால் பெருவிரலால் மலையை அழுந்துமாறு ஊன்றுகிறார். தேவியின் முகத்தில் ஏற்படும் பய உணர்ச்சியும் சிவபெருமான் முகத்தில் அரும்பும் புன்னகையும் பார்ப்பதற்குத் தெவிட்டாத தெள்ளமுது.

இவர் மனச்சுமையும் கடன் சுமையும் நீக்கும் கைலாசநாதர் என்று அழைக்கப்படுகிறார். திங்கள் மற்றும் சனிக்கிழமைகளில் இவருக்கு 11 நெய்விளக்குகள் ஏற்றினால் நினைத்த காரியம் நடந்தேறும். கருத்து வேறுபாடுகளால் பிரிந்து வாழும் கணவன் மனைவியர் ஒன்றாக சேருவர்.

மகாமண்டபத்தில் பாணம் மட்டும் உடைய ஒரு லிங்கம். சூரியன், கமல பீடத்தில் சந்திரன், பைரவர், நவக்கிரஹம், நால்வர் பெருமக்கள் அருள்பாலிக்கின்றனர்.

சந்திரன் இங்கு வந்து சோமநாதரை வழிபட்டு நலம் பெற்றதால் நல்ல அறிவும் அழகும் உள்ள குழந்தைகளை பெற விரும்பும் பெண்கள் சந்திரனுக்கும் சோமநாதருக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்தால் அழகும் அறிவும் உள்ள குழந்தைகளைப் பெறுவர்.

மிகப் பெரிய ஸ்ரீவீரதுர்க்கை கம்பீரமாக ஒரு மேடையின் மீது வடக்கு நோக்கி அருள்பாலிக்கிறார். அழகு ததும்பும் இவ்வம்பிகையின் திருவுருவினைக் காண கண்கள் ஆயிரம் வேண்டும். கருவறையில் சோமநாதர் சுமார் மூன்றரை அடி உயர லிங்கத்திருமேனியாக காட்சியளிக்கிறார்.

சுவாமி சன்னதிக்கு வெளியே அம்பாள் சன்னதி உள்ளது. திருக்காமக்கோட்டம் என்று சொல்லப்படும் மண்டபத்தின் முகப்பில் திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து இரண்யனை வதம் செய்யும் கோலம் சிற்ப வடிவில் அற்புதமாக வடிக்கப்பட்டுள்ளது. முன் மண்டபம், மகாமண்டபம், அர்த்த மண்டபம் என கம்பீரமாக காட்சியளிக்கிறது. அம்பாள் சோமகமலாம்பிகை நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறாள்.

நிர்வாகம்

இத்திருக்கோயில் சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலின் இணைகோயிலாக உள்ளது. 440 அடி நீளமும் 255 அடி அகலமும் உடைய பரப்பளவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணியில் ஆர்வம் கொண்ட அன்பர்கள் திருப்பணிக்கு உதவிட வேண்டுகிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

துணை ஆணையர்/ செயல் அலுவலர்

அருள்மிகு சுவாமிநாதசுவாமி
திருக்கோயில்

சுவாமிமலை - 612 302

போன் - 0435 - 2454421.

அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்

துன்பங்களை நீக்கி நன்மைதரும் திருத்தலம்

திருக்கோயில் அமைவிடம்

வைணவத் திருத்தலங்களில் மிகவும் தொன்மை வாய்ந்ததும், ஆழ்வார்களால் போற்றி பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்த திருத்தலமாகிய துளசிவனம் (ப்ருந்தாரண்ய க்ஷேத்திரம்) என்கிற திருவல்லிக்கேணி என்னும் அற்புதத் திருத்தலம்.

சென்னை சென்ட்ரல் ரயில்நிலையத்தில் இருந்தும், எழும்பூர், ரயில்நிலையத்தில் இருந்தும் சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில், பேருந்து வசதிகளுடன் சென்னை மெரினா கடற்கரைக்கு மிக அருகில் அமைந்துள்ளது.

ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன் (மூலவர்)

மூலவர் - ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன் என்கிற திருநாமத்துடன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில், ருக்மிணீத் தாயார், அண்ணன் பலராமன், தம்பி சாத்யகி, பிள்ளை பிரத்யும்னன், பேரன் அநிருத்தன் ஆகியோருடன் குடும்பசகிதமாய் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

எல்லா திவ்யதேசங்களிலும் சங்கு, சக்கரம் ஏந்தி நான்கு திருக்கரங்களுடன் காட்சியளிக்கும் எம்பெருமான் இத்திருத்தலத்தில் இரண்டு திருக்கரங்களுடன் மானுஷ வாசுதேவனாக கீதையை உபதேசம் செய்த திருக்கோலத்துடன் வலது திருக்கரத்தில் சங்கு ஏந்தி (சக்கரம் இல்லாமல் இடது திருக்கரத்தால் தனது திருவடியை அபயமாக காண்பித்து தன்னை சரணடைந்தால் அனைத்து துன்பங்களிலிருந்தும் காப்பாற்றி நன்மைகள் வழங்கி அருள் பாலிக்கின்றார்.

ஸ்ரீ பார்த்தசாரதி (உற்சவர்)

ஸ்ரீ கிருஷ்ணன் பாரதப் போரில் அர்ஜுனனுக்கு சாரதியாக தேரோட்டி பீஷ்மரின் பானங்களை தன்முகத்தில் தாங்கியதால் ஏற்பட்ட அம்புபட்ட வடுக்களுடன் உற்சவர் ஸ்ரீ பார்த்தசாரதி காண்போர் வியக்கும் வண்ணம் காட்சி தருகின்றார்.

ஸ்ரீ வேதவல்லித்தாயார் சமேத ஸ்ரீ ரங்கநாதர்

பிருகுபுத்திரியாக கைரவீணி திருக்குளக் கரையில் ஸ்ரீ வேதவல்லித் தாயார் அவதாரம்.

தனிக்கோயில் தாயார் - இவர் தன்னை திருமணம் செய்துகொள்ள வந்த ஸ்ரீ ரங்கநாதனை வாரீர்! என அழைத்ததால் ஸ்ரீமந்நாதன் என அழைக்கப்படுகிறார்.

புரட்டாசி மாதத்தில் நவராத்திரி திருவிழா நடைபெறுகிறது.

மாசிமாத வளர்பிறை துவாதசியன்று ஸ்ரீ வேதவல்லித்தாயாருக்கும், ஸ்ரீ ரங்கநாதருக்கும் வைதீக முறைப்படி திருக்கல்யாண உற்சவம் மிக விமரிசையாக நடைபெறுகிறது.

மூலவர் ரங்கநாதர் புஜங்கசயனத்தில் பாம்பணையின் மேல் ஆயுதம் இல்லாமல் நான்கு திருக்கரங்களுடன் ஸ்ரீதேவி, பூதேவியுடனும் நாபியில் ப்ரம்மாவுடன் தெற்குபுறம் தலை வைத்து கிழக்கு நோக்கி, வராகருடனும் நரசிம்மருடனும் சேவை தருகின்றார்.

ஸ்ரீராமர்

மதுமான் முனிவருக்கு தன் தம்பிகள் பரதன், சத்ருக்கணன், இலக்குமணன், ஆகியோருடன் சக்கரவர்த்தி திருமகனான ஸ்ரீ இராமர் தன் தேவி சீதையுடன் சேவை தருகின்றார்.

ஸ்ரீராம நவமி உற்சவம் பங்குனி மாதம் 9 நாட்கள் நடைபெறுகிறது. இவருக்கு எதிரிலேயே ஸ்ரீ ஆஞ்சநேயரும் காட்சி தருகின்றார்.

ஸ்ரீகஜேந்திவரதர்

சப்தரோமா முனிவருக்கு கருடன் மேல் வரம் தரும் ராஜனாக யானையின் துயர் தீர்த்ததுபோல் நம் துயர்களை தீர்ப்பதற்காக ஸ்ரீகஜேந்திரவரதராஜனாக தினம்தோறும் கருடசேவையில் அருள் பாலிப்பதை இந்த திவ்ய தேசத்தில் மட்டுமே காணலாம்.

இவருக்கு வைகாசி மாதம் பத்துநாள் திருவிழா, மாசி மாதத்தில் தெப்பத்திருவிழா மற்றும் தவன உற்சவம் நடைபெறுகிறது.

ஸ்ரீ யோக நரசிம்மர்

யோகாசனத்தில் யோக நிலையில் மேற்கு நோக்கி எழுந்து அருள்பாலிக்கின்றார்.

உற்சவ மூர்த்தி தெள்ளியசிங்கர் (அழகியசிங்கர்) ஸ்ரீதேவி, பூதேவி தாயாருடன் நான்கு திருக்கரங்களுடன் சங்கு, சக்கரம், அபய, ஆஹ்வான அஸ்தத்துடன் சேவை புரிகிறார்.

தன்னை சேவிக்க வரும் பக்தர்கள் நரசிம்மர் என்று அஞ்சவேண்டாம். தாமே பக்தர்களை இடது திருக்கரத்தால் (அஹ்வானம் - அழைப்பது என்று பொருள்) அழைத்து அபயம் கொடுப்பதாக அழகியசிங்கர்காட்சிதருகின்றார்.

தெள்ளிய சிங்கமாகிய தேவைத் திருவல்லிக்கேணி கண்டேனே என்று திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்விக்கப்பட்ட இப்பெருமான் நோய் தீர்க்கும் பெருமான்.

பக்தர்கள் தங்களுக்கு வரும் துன்பம் உப்பு போல் கரைந்து, நோய் மிளகு போல் உதிர்ந்து விட வேண்டும் என்று பிரார்த்தனை செய்து இவரை வழிபட்டால் நோய் நீங்கி, உடல் ஆரோக்கியம் பெறுவதோடு, மன நிம்மதியுடன், பகைவர்கள் பயமின்றி ஆனந்தமாக வாழ்வார்கள் என்பது கண்கூடான உண்மையாகும்.

ஸ்ரீஆண்டாள்

ஆடிமாதத்தில் பத்து நாட்கள் திருவாடிப்பூரதிருவிழாநடைபெறுகிறது.

மார்கழி மாதத்தில் ஒன்பது நாட்கள் நீராட்ட உற்சவம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாளான போகிபண்டிகை அன்று ஸ்ரீ பார்த்தசாரதிக்கும் ஸ்ரீ ஆண்டாளுக்கும்

திருக்கல்யாண உற்சவம் மிக விமரிசையாக நடைபெறுகிறது.

திருக்குளம்

அல்லி மலர்கள் நிறைந்த கேணி என்பதால் திரு அல்லிக்கேணி என இத்தலம், குளத்தின் பெயரிலேயே அழைக்கப்படுகிறது.

இந்திர, சோம, மீன, அக்னி, விஷ்ணு ஆகிய ஐந்து தீர்த்தங்களுடன் கங்கையை விட புனிதமான இத்திருக்குளம் கைரவீணி புஷ்கரணி என்று அழைக்கப்படுகிறது.

திருக்குளத்தில் மாசிமாதம் அமாவாசைமுதல் 7 நாட்கள் அனைத்து எம்பெருமான்களுக்கும் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது. ஆடிமாத பௌர்ணமியில் கஜேந்திர மோட்சமும் நடைபெறுகிறது.

ஸ்ரீராமானுஜர்

இத்தலத்து குளக்கரையில் குழந்தைப்பேறு வேண்டி யாகம்செய்ததின் பலனாக ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமியே ஆசூரி கேசவப் பெருமாளுக்கும், காந்திமதி அம்மையாருக்கும் மகனாக ஸ்ரீ ராமானுஜர் என்ற திருநாமத்துடன் திருவாதிரை நட்சத்திரத்தில் அவதரித்தார்.

ஸ்ரீ ராமானுஜருக்கு சித்திரை மாதத்தில் பத்து நாட்கள் வெகு விமரிசையாக திருவிழா நடைபெறுகிறது.

ஸ்ரீ மணவாளமாமுனிகள்

பெருமாளுக்கு ஆசிரியராக, உடையவரின் மறு அவதாரமான ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருவிழா வெகு சிறப்பாக ஐப்பசி மாதத்தில் நடைபெறுகிறது.

ஐப்பசி மூல நட்சத்திரத்தன்று வைர அங்கியுடன் உத்சவர் பார்த்தசாரதியின் கைத்தல சேவை ஸ்ரீ மணவாள மாமுனிகளுக்காக நடைபெறும்.

திருத்தலச்சிறப்புகள்

ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம், அயோத்தி, அகோபிலம் ஆகிய ஐந்து திவ்யதேசத்து எம்பெருமான்கள் இத்தலத்தில் தனித்தனி சன்னதிகளில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

நின்ற கோலத்தில் வீர நிலையில் மீசையுடன் வேங்கட கிருஷ்ணனாகவும், இருந்த திருக்கோலத்தில் யோக நிலையில் யோகநரசிம்மராகவும், கிடந்த திருக்கோலத்தில் போகசயன நிலையில் ஸ்ரீரங்கநாதராகவும் இத்தலத்தில் சேவை தருகின்றனர்.

பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய மூன்று ஆழ்வார்கள் இத்தலத்தைப் போற்றி பாடியுள்ளனர்.

திருமொழித் திருநாள் (பகல்பத்து),

திருவாய்மொழித் திருநாள் (இராப்பத்து) ஆகிய இரு திருவிழாக்களிலும் பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பெற்ற தமிழ் பாசுரங்களான நாலாயிர திவ்யபிரபந்தம் பாடப்பட்டு வருகிறது. இத்தமிழ் திருவிழாவின் சிறப்பம்சமான வைகுண்டஏகாதசி திருநாள் இத்தலத்தின் சிறப்புமிகு பெருவிழா

அருள்மிகு பார்த்தசாரதி -ரோகிணி மற்றும் திருவோணம், ஸ்ரீராமர் - புனர்வசு, ஸ்ரீ ஆண்டாள் - பூரம், ஸ்ரீ வரதராஜர் - அஸ்தம், ஸ்ரீ யோக நரசிம்மர் - சுவாதி, ஸ்ரீ ரங்கநாதர் - ரேவதி, ஸ்ரீ வேதவல்லித்தாயார் - உத்திரம் மேற்கண்ட நட்சத்திரத்தன்று அந்தந்த பெருமாளை வழிபட்டால் வாழ்வில் எல்லா வளமும் நலமும் உண்டாகும்.

சித்திரை, ஆடி, மாசி - பார்த்தசாரதி, வைகாசி - வரதர், ஆனி - நரசிம்மர், பங்குனிமாதம் - ராமர், பங்குனி மாதம் - ரங்கநாதர் (கண்ணாடி கருடன்), என ஆண்டுதோறும் ஏழு கருட உற்சவங்கள் நடைபெறுவது இத்தலத்தின் தனிச்சிறப்பு.

தத்துவ மேதை விவேகானந்தர் இத்தலத்திற்கு வந்து வழிபட்டு எம்பெருமானின் அருளைப் பெற்றார்.

பாரதியார் பாடிய கண்ணன் பாடல்கள் பார்த்தசாரதி சுவாமியை மனதில் நினைத்து பாடியவையே.

இங்கு வருடந்தோறும் சுமார் 250 நாட்களுக்கு மேல் திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இங்கு நைவேத்தியத்திற்கு மிளகாய், கடலை எண்ணை சேர்ப்பது கிடையாது.

சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம்

இங்கு சிறப்பம்சமாகும்.

காட்சியளித்தல்

சுமதி சோழராஜன் - ஸ்ரீ பார்த்தசாரதி

அத்ரி முனிவர் - ஸ்ரீ நரசிம்மர்

மதுமான் - ஸ்ரீ ராமர் தன் தம்பிகளுடன்

சப்தரோமா - ஸ்ரீ கஜேந்திர வரதராஜர்

ப்ருகுபுத்ரி - ஸ்ரீ வேதவல்லித்தாயார்

தல விருட்சம்

இத்திருக்கோயிலில் முன்புறம் உள்ள மகிழமரம் தல விருட்சமாக விளங்குகிறது.

முக்கியத் திருவிழாக்கள்

சித்திரை	ஸ்ரீ பார்த்தசாரதிசுவாமி பிரம்ம உற்சவம், ஸ்ரீ உடையவர் உற்சவம், விடையாற்றி உற்சவம்
வைகாசி	வசந்த உற்சவம், ஸ்ரீ கஜேந்திரவரதராஜசுவாமி உற்சவம், ஸ்ரீ ரங்கநாதர் வேதவல்லித்தாயார் வசந்த உற்சவம்
ஆனி	ஸ்ரீ நரசிம்மசுவாமி பிரம்ம உற்சவம், கோடை உற்சவம்
ஆடி	கஜேந்தரமோட்சம், ஸ்ரீ பார்த்தசாரதி ஜேஷ்டாபிஷேகம், திருப்பாவாடை உற்சவம், திருவாடிப்பூரம், ஸ்ரீ நரசிம்மர் ஜேஷ்டாபிஷேகம்
ஆவணி	திருப்பவித்திர உற்சவம், ஸ்ரீ ஜெயந்தி
புரட்டாசி	நவராத்திரி ஸ்ரீ வேதவல்லித் தாயார் இலட்சார்ச்சனை
ஐப்பசி	ஸ்ரீ மணவாளமாமுனிகள் உற்சவம், தீபாவளி, அன்னகூட உற்சவம்
மார்கழி	பகல்பத்து, வைகுண்ட ஏகாதசி, இராப்பத்து
தை	ஸ்ரீ பார்த்தசாரதிசுவாமி இலட்சார்ச்சனை, ரதசப்தமி, ஈக்காட்டுதாங்கல் உற்சவம்
மாசி	மாசி மகம், தெப்ப உற்சவம், தவன உற்சவம்
பங்குனி	பங்குனி உத்திரம், ஸ்ரீ ராமநவமி உற்சவம்

ஆறுகால பூஜை விபரம்

காலை 05.30 திருமஞ்சன குடம் வருதல், காலை 05.55 சுப்ரபாதம், காலை 06.00 விஸ்வரூபம், காலை 06.15 திருவாராதனம், காலை 08.00 காலசந்தி தீர்த்தம், காலை 11.00 உச்சிக்கால பூஜை, பகல் 12.00 திருக்காப்பு சேர்த்தல், மாலை 04.00 திருக்காப்பு நீக்குதல், மாலை 06.00 நித்யாநுசந்தானம், மாலை 07.30 திருவாராதனம் (இராக்கால பூஜை), இரவு 09.00 அர்த்தஜாமம் (சனிக்கிழமை விசேட நாட்கள் தவிர)

சிறப்பு சகஸ்ரநாம அர்ச்சனை

இத்திருக்கோயிலில் வெள்ளி, சனிக்கிழமைகள் நீங்கலாக மற்ற நாட்களில் சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெற்று வருகிறது. சிறப்பு சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய விரும்புவோர் இரண்டு நாட்களுக்கு முன்னதாக ரூ.250/- கட்டணம் செலுத்தி, பதிவு செய்து கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் திருக்கோயிலுக்கு நன்கொடையினை வரைவோலை, காசோலை மற்றும் மணியாடர் மூலம் அனுப்பவேண்டிய முகவரி

துணை ஆணையர்/ செயல் அலுவலர்
அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்
திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
Web:www.sriparthasarathyswamytemple.com
E-mail : parthasarathytemple@vsnl.net
info@sriparthasarathyswamytemple.com
Phone : Counter - 28442449 / 28442462 Fax : 28447042

திருக்கோயிலில் ஆண்டு முழுவதும் நடைபெறும் திருவிழாக்கள் உள்ளடங்கிய டிவிடி மற்றும் விசிடி திருக்கோயில் அலுவலகத்தில் கிடைக்கும்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., முதன்மை செயலர் /ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை, சென்னை - 600 034. தொலைபெசி : 28334811/12/13
ஆசிரியர் (கூ.பொ) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயிலில் ஐம்பெரும் விழா

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயிலில் 28.08.2008 அன்று புதிய பேருந்துகள் இயக்க விழா, புதிய பேருந்து நிறுத்தக் கூடத் திறப்பு விழா, புதியதங்கத்தேர்க்கான செப்பு மற்றும் பொன் வேலைப்பாடுகள் துவக்கவிழா, வாகனம் நிறுத்துமிடம் கால்கோள் விழா. அருள்மிகு கயிலாசநாதர் கோயில் புதிய நூலகத் திறப்பு விழா ஆகியவை நடைபெற்றன. இவ்விழாவில் மாண்புமிகு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரங்கள் வழங்கும் துறை இணை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு. வி.பி. துரைசாமி அவர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. உ. சகாயம், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08

அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்

திருவல்லிக்கேணி, சென்னை - 5

புரட்டாசி சனி வாரம், நவராத்திரி உற்சவம்

விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப்புரமெரிசெய்த சிவனுறுதுயர்களை தேவை
பற்றலர்வீயக் கோல்கையில்கொண்டு பார்த்தன் தன் தேர் முன்நின்றானைச்
சிற்றுவை பணியால் முடிதுறந்தானைத் திருவல்லிக்கேணி கண்டேனே.

- திருமங்கையாழ்வார்.

வைணவத் திருத்தலங்களில் சிறப்பாக விளங்குகின்ற திருவல்லிக்கேணி,
அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகும்.

இத்திருக்கோவிலில் ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம், அஹோபிலம், அயோத்தி ஆகிய ஐந்து திவ்யதேசத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்கள் இங்கு ஒரே திருக்கோயிலில் ஐந்து தனித்தனி சன்னதிகளில் அருள்மிகு பார்த்தசாரதி, அருள்மிகு நரசிம்மஸ்வாமி, அருள்மிகு ரங்கநாதர், அருள்மிகு சக்ரவர்த்தித் திருமகன், அருள்மிகு கஜேந்திர வரதர், ஆகிய எம்பெருமான்களுக்கு ஆண்டு முழுவதும் பல்வேறு உற்சவங்கள் வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது. புரட்டாசி மாதம் முழுவதும் திருப்பதி வேங்கடவனுக்கு முக்கியமான மாதமாகும். வேங்கடவனே இங்கு வேங்கடகிருஷ்ணனாக சேவை சாதிப்பதால் இங்கு புரட்டாசி மாதம் சிறப்பான மாதமாகும். இதில் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகள் வெகு சிறப்பான நாட்களாகும். இந்த நாட்களில் கீழ்க்கண்ட விபரப்படி திருக்கோயில் திறக்கப்பட்டு தரிசனம் நடைபெறுகிறது.

புரட்டாசி சனி 1ம் வாரம்	20.9.2008	காலை 4.00மணிக்கு விஸ்வரூபம் காலை 6.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை மாலை 3.00 முதல் இரவு 10.30 வரை சிறப்பு நுழைவுக் கட்டணம் ரூ.100/-, ரூ.10/- பொது தரிசனம் உண்டு
புரட்டாசி சனி 2ம் வாரம்	27.9.2008	
புரட்டாசி சனி 3ம் வாரம்	4.10.2008	
புரட்டாசி சனி 4ம் வாரம்	11.10.2008	
புரட்டாசி சனி 5ம் வாரம்	18.10.2008	

நவராத்திரி திருவிழாவில் ஸ்ரீ வேதவல்லித் தாயாருக்கு லட்சார்ச்சனை

நவராத்திரி	30.9.2008 முதல் 8.10.2008 முடிய	அருள்மிகு வேதவல்லித்தாயாருக்கு லட்சார்ச்சனை நடைபெறும். மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை சனிக்கிழமை மட்டும் இரவு 8.00 மணிக்கு லட்சார்ச்சனை கட்டணம் ரூ.100/-

சேவார்த்திப் பெருமக்கள் அனைவரும் தவறாது இப்பெருவிழாவில் கலந்து கொண்டு, அருள்மிகு ருக்மணி சமேத பார்த்தசாரதி சுவாமியின் திருவருள் மற்றும் ஸ்ரீ வேதவல்லித் தாயாரின் திருவருளையும் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பொ.ஜெயராமன்,
துணை ஆணையர்/ செயல் அலுவலர் / தக்கார்.

Web : www. sriparthasarathyswamytemple.com
E-mail : parthasarathytemple@vsnl.net, info@sriparthasarathyswamytemple.com
Phone : Counter - 28442449 / 28442462 Fax : 28447042